ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா | வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா ரூ | | | ரூ 3—0 |
| 6 மாத சந்தா | ,, | — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு | ,, | — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில வருஷ ஆவணி மீ 31உ (15—9—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 19

இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்ற அநேக வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும் முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்கபதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் டி. சி. சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் பிரசித்தி பெற்ற மருந்துகள்.

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவமுறைப்படி தயார் செய்யப்படுவது.)

### ஆச்சரியமாய் அநேக நோய்களை குணம் செய்கிறது.

### மஹா சந்தனாதி தயிலம்

உலகப் பிரசித்தி பெற்றது

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தயிலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தயிலத்தால் குணமாகும் நோய்கள்

| | |
|---|---|
| கண் எரிச்சல் | வெட்டை சூடு |
| கண் சிகப்பு | காது நோய் |
| கண்ணில் நீர் வடிதல் | மண்டை இடி |
| கண் அரிப்பு | பீனிசம் |
| கண் பார்வைக்குறைவு | தலைமயக்கம் |
| கண் கூச்சம் | தலைப்பொடுகு |
| கண்ணில் பீளைசாருதல் | சொரி சிரங்கு |
| மேகநீர், வெள்ளெழுத்து | தலைமயிர் உதிர்தல் |
| ஒருத்தலை நோய் | நாள்பட்ட தலைநோய் |
| கைகால் எரிச்சல் | முதலிய பல வியாதிகளை |
| மூலச்சூடு | ஆச்சரியமாய் குணம் செய்யும் |
| அஸ்திகாங்கை | |

### சாலாமி சிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து!

மிருந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தை சாப்பிட்டு வந்தால் கைகால் அசதி, இடுப்பு வலி, பலக்குறைவு, ஆயாசம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கி குறைந்த ஆண் தன்மையை அதிகரிக்கச்செய்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, வீரியத்தை விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் கொடுக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. பத்தியமில்லை.

ஒருசேர் டப்பி விலை ரூ. 2—8—0

சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஒரு முறை இத்தயிலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரிசோதித்துப்பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0 12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

(38)

கலப்பு மணத்தால் சாதி ஒழியும்

ரோஜா முத்தையா

## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

# அமிர்த சஞ்சீவி லேகியமும் அயக்காந்த செந்தூரமுமே

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்று மில்லை

விளம்பரம்

இதைக் கண்ணுறும் கனவான்களே!



இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய செந்தூரங்களால்

### நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தப்பாண்டு, கைகால் முடக்கு, நீர்வாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுவீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி புண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும் தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபீஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பல மிழந்தவர்கள் எண்ணிக்கையாக மேற்படி லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்த மடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட சூப்பு. இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவர வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாரங்கள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனாவசியம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1 12 0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1 12 0 தபாற்கூலி ரூபா 1 4 0

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5—8—0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

(5) விலாசம்:— **கருணாநிதி டிப்போ,** 1/6 வெங்கடேசமேஸ்திரி தெரு, சென்னை.

# தமிழ் மாகாண மகாநாடும் :: :: :: :: தேசிய வாதிகளும்

(கைவல்யம்)

காங்கிரஸ்காரர்களான தேசிய வாதிகள் தாங்கள் கூடின மகாநாட்டிற்கு வடதேசத்திலிருந்து தலைவரைக் கொண்டுவந்து தங்கள் மகாநாட்டை நடத்தினார்கள். அந்த மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் சக்தியுடைய தேசியத் தலைவர்கள் நம் நாட்டிலுமுண்டு. புராணப் பிரசங்கம் ஒரு வித்துவானிடமிருந்து இன்னொரு வித்துவானிடம் பரவி ஒரே மாதிரியாக எவ்வித வழக்கத்தோடு அமைந்திருக்கிறதோ அதுபோலவே தேசியப் பிரசங்கமும் எல்லாருக்கும் ஒரே பாட்டையில் பிரசங்கம் அமைந்து போயிருப்பதினால், நமது நாட்டு எந்த தேசியவாதியும் தேசிய கூட்டங்களுக்கு தலைமை வகித்து தேசியப் பிரசங்கம் செய்யக்கூடியவர்களே. அப்படியிருந்தும் அவர்களில் யாரையேனும் சபைத் தலைவராக்கவில்லை. ஏனெனில் நமது தேசிய வாதிகளென்னப் பட்டவர்களிடம் சனங்களுக்கு நம்பிக்கைக் குறைவும், அதிருப்தியும் ஏற்பட்டுவிட்டதென்பது அநேகமாக எல்லாருக்கும் தெரிந்து போயிற்று.

வளர்ச்சிக்கு முதலாவதாக வேண்டியது சுதந்திரம். மனிதனுக்கு நினைப்பதற்கும், பேசுவதற்கும், அவன் தேசத்தில் தன்மதிப்போடு வாழ்வதற்கும் சுதந்திரம் வேண்டியது போலவே; அவனுக்கும் கடவுள், சமயம், ஆகாரம், உடை, விவாகம் முதலிய எல்லா விஷயங்களிலும் சுதந்திரம் வேண்டுமென்பதை சன சமூகம் விரும்புகிறது. இந்த நிலைமையில் நமது தேசியவாதிகள் வைதிகக்கொடுமைக்கு ஆதரவாகவிருந்து சன சமூகக்கொடுமையை நினையாமல் ஆங்கிலேயரிடத்தினின்றும் அதிக அதிகாரத்தைப் பெறுவதற்குச் சபைகள் கூட்டவும், அதைக் கண்டு ஆங்கிலேயர்கள் சிரிக்கவும் சுதந்திரத்தைக் கொடுப்பதற்குத் தயாராயில்லாத எவனும் சுதந்திரத்திற்கு அருகனல்லன் என்று பல தேசத்து அறிவாளிகள் நமக்குப் புத்திசொல்லவும் ஏற்பட்ட இந்தக் காலத்தில், நம் தேசத்தில் எளியவர்கள், தாழ்ந்தவர்கள், தள்ளப்பட்டவர்கள், நீக்கப்பட்டவர்கள் இவர்களுக்கு சிநேகிதர்களில்லை; சகாயமில்லை; மேலேறுவதற்கு வழியில்லை; சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. அவர்கள் எவ்வளவு முயற்சி செய்தபோதிலும் மேலெழும்ப முடிவதில்லை. நாளுக்கு நாள் கீழே தாழ்ந்து போகிறார்கள். குரூர சுபாவத்தையுடைய உயர்ந்த சாதி யென்னும் சமூகங்கள் அவர்களின் மேல் அடிமேல் அடியாக அடிப்பதை உணர்கிறார்கள். உணர்ந்தாலும் இரகசியப் புரட்டில் அந்தரங்கப் பித்தலாட்டம் செய்து ஆடை பூஜி வேடத்தால் தன்னலத்தைக் காப்பாற்றுவதே உள் நோக்கமாயிருக்கும் வைதிகக் கோஷ்டியினர்கள் வெளி வேஷம்போட்டு முகஸ்துதியால் பணக்காரர்களை ஏமாற்றி விடுவதால் அவை ஒரு பலனடையாமல் / செய்யப்பட்டுவிடுகிறது. இதற்கெல்லாம் நமது தேசிய வாதிகளில் அநேகர் செவி சாய்த்து அனுகூலமாகவேஇருந்து வந்திருக்கிறார்கள்; வந்துகொண்டுமிருக்கின்றார்கள். இந்தஅனுபோகத்தாலும்காங்கிரஸின்கொள்கைகளுக்கு விரோதமாய் அதிகாரிகளிடம் இதம்பேசி தங்களினத்தார்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும்உத்தியோகம் வாங்கிவருவதையும் கண்டு நம் தென்தேசத் தேசியவாதிகளிடம் சன சமூகங்களுக்கு மதிப்புக் குறைந்து போய் விட்டதென்று தேசியத் தலைவர்கள் தெரிந்து கொண்டமையால் வடநாட்டிலிருந்து தலைவர்களை நமது மகாநாட்டிற்குத் தலைவர்களாக வருவித்துக் கொள்ளவேண்டி வந்தது.

உலகில் ஒரு மதமும் மானிட வர்க்கத்தின் பெருமையை இந்து மதத்தைப் போல் அவ்வளவு உயர்ந்தபடியில் போதிப்பதில்லை. அதன் தத்துவத்தை மேனாட்டுத் தத்துவ சாஸ்திரிகளும் விசேடப் படுத்தியே சொல்லுகிறார்கள் என்று தேசியவாதப் பத்திரிகைகளும் தேசியவாதிகளும் சமயம் நேரிடுகையில் எடுத்துக் காட்டுவதுபோல் உலகில் ஒருமதமும் தாழ்ந்தோர் எளியோர் இவர்களுடைய கழுத்தில் இந்து மதத்தைப்போல் ஏறி மிதிப்பதுமில்லை என்னும் அனுபோகத்தையும் மேனாடும் கீழ்நாடும் ஒருங்கே தெரிந்த உத்தமர்கள் வார்த்தையையும் எடுத்துச் சொல்லும் தேசியப் பத்திரிகைகளோ தேசியவாதிகளோ இல்லை. இந்து மதத்திலுள்ள வைதிகப் பற்றுடையவர்களும், வெளிவேடக்காரர்களும், மதமே ஜீவனமாக உடையோர்களும், பாரமார்த்திகம் வியாபகமென்ற கொள்கைகளின் வழுவமாய் கொடுமை செய்வதற்கு சிருட்டித்திருக்கும் தந்திரங்களை சமூகங்கள் தெரிந்து கொள்ளுவதற்கு பத்திரிகையில் எழுதியோ மேடை ஏறிப்பேசியோ நமது நாட்டுத் தேசிய வாதிகள் செய்வதில்லை. அதனால் அவர்கள்பேரில் சனங்களுக்குண்டாயிருக்கும் நம்பிக்கைக் குறைவை நிவர்த்தி செய்து கொள்ளுவதற்கு வடதேச தேசியவாதிகளைக் கொண்டுவந்து அவர்களுக்கு இங்குள்ள விவகாரங்களைமாற்றிச்சொல்லி அவர்கள் வாயால் இப்படியும் அப்படியும் படும்படாமலும் பிரசங்கம் செய்யவைத்து தங்கள் மன எண்ணத்திற்குஏற்றவாறு அவர்கள் சொல்லிப்போனதின் மறவில் தாங்கள் பிரசங்கம் செய்ய அனுகூலமேற்படுமென்று வடதேசத் தலைவர்களை அழைத்து வருகிறார்கள்.

இங்குள்ள ஆங்கிலோ இந்தியன் சர்க்கார் உத்யோகத்தனுயினும் வர்த்தகனுயினும் அவர்களுக்கு இவ்விடத்து நிலைமை கண்தெரியவில்லை மிகவும் நெருக்கத்திலே கண்மங்கல் ஏற்படும் அவர்களுடைய குறுகிய பார்வையில் அவர்கள் அதிகாரமே பெரியதாகவும் இங்குள்ள முப்பது கோடி மக்களும் இவர்களுடைய சுக துக்கங்களும் துச்சமாகவும் தோன்றுகிறது; என்று தேசியமேடையில் தேசியப் பிரசங்கத்தின் முதற்காண்டம் படிக்கும் தேசிய வாதிகள் கூறுகின்றார்கள். இந்த தேசத்தில் ஏழைகள் தாழ்ந்தவர்கள் வறுமையிலும் அறியீனத்திலும் கொடுமையிலும் மூழ்கியிருக்கிற பல கோடி சனங்களுக்காகவன் இரங்குவதில்லை. அவர்களுக்கு வழியென்ன? அவர்கள் ஞானத்தையோ கல்வியோ காண்பதில்லையே. இலட்சக்கணக்கான சனங்கள் பசிநோயினாலும் அறிவின்மையினாலும் பீடிக்கப்பட்டு அவர்களுடைய உழைப்பில் போகங்களை அனுபவித்து வித்தை பயின்று அவர்களைக் கொஞ்சமேனும் கவனியாமல் நமது நாட்டிலிருக்கும் துரோகத் தன்மையும் ஏழைகளை இம்சித்து சிரம்பப்பணம் சம்பாதித்துக்கொண்டு கோத்தியான உடைகள் உடுத்தி பலருசியோடு பல ஆகாரங்களை உண்டு நீரழிவால் அவத்தைப்பட்டு இங்கிலீஷ் வியாபாரத்தைப் பெருக்கிக்கொண்டிருப்பவர்களையும், ஊருக்குள்ளும் வீதிக்குள்ளும் அண்டவிடாமல் பல லட்சக்கணக்கான சனங்களை காட்டு மனிதர்கள்போல் திரியும்படி விடப்பட்ட இந்து மத வைதீகத்தையும் பார்த்துக்கொண்டிருக்கும் தேசிய வாதிகளிருக்கும்வரையில் எந்த வடதேசத்துத் தலைவர் வந்து தலைமை வகித்தாலும் நாமும் நமது நாடும் கரை ஏறவழியுண்டா?

புலால் மறுக்கும் ஜீவகாருண்யத்தில் பார்ப்பனர்களைவிட உயர்ந்த சைவர்களின் பிள்ளைகளுக்குக்கூட வடமொழி இலக்கணம் கற்றுக் கொடுக்க மறுத்த திருப்பதிப்பள்ளியின் தடையை நீக்கின மந்திரி டாக்டர் சுப்பராயனை திட்டுகிறான் தேசிய வாதிகளுக்குத்தெரியுமோ? ராஜா சர் அண்ணாமலைப் பிரபுவின் பள்ளியில் பார்ப்பனரைவிட சைவப் பற்றுடைய சைவப் பிள்ளைகளைக் கூட சமயத் தத்துவ வகுப்பில் சேர்த்துக் கொள்ளாமலிருக்கும் மானத்தை சையன் உணராமல் கல் ஆலுக்குக் கீழ் இருந்தா? மர அரசுக்கு மேலிருந்தா? வடநாட்டினு ஒளித்தா? தென்னாட்டு முனிவர்களுக்கா தெட்சிணாமூர்த்தி தென்னாட்டு மறையையும் வடநாட்டு வேதத்தையும் உபதேசித்தது? இன்னும் தமிழ்நாட்டு வட்டமிட்டு ஏமனிடம் சென்றுபோனபோது அதில் அடித்துக் கொண்டு போன அடியார்கள் எம பட்டணத்திலிருக்கிறார்களா? கைலாசமே போய்ச் சேர்ந்தார்களா? அகத்தியர் கடலைக் குடித்தபோது அங்கு கிடந்த கருவாட்டை எல்லாம் எந்தக் கப்பலில் எந்த தேசத்திற்கு எந்த சேவகனால் ஏற்ற அனுப்பப்பட்டது? இதில் மேனாட்டார்களின் அபிப்பிராயமென்ன? என்னும் பெரிய விஷயங்களைப் பற்றின ஆராய்ச்சியில் சைவப் பெரியவர்களெல்லாம் இறங்கி இருந்தாலும் ராஜா சர். அண்ணாமலை செட்டியாரைக் கண்டு உத்தியோகம் கேட்கவும், உத்தியோக நிர்ணயம் செய்யவும், ஓட்டு சேகரிக்கவும் போதும் தேசிய வாதிகள் எல்லாம் பிள்ளைகளையும் தத்துவ சாஸ்திர வகுப்பில் சேர்த்துக் கொள்ளச் சொல்லியிருந்தால் வடநாட்டிலிருந்து தேசியத் தலைவர் வரவேண்டுவதில்லையே.

வட தேசத்திலிருந்து சிலரைக் கூட்டி வந்து பிரசங்கம் செய்வது வழக்கமாகவேயிருக்கிறது. அதனால் நமக்கு யாதொரு பாதகமுமில்லை. பிரசங்கம் செய்கிறவர்கள் சீர்திருத்தக்காரர்கள் சொல்லும் விஷயங்களுக்கு அனுகூலமாகவே பேசுகிறார்கள். சீர் திருத்தக்காரர்கள் சொல்லுவது போல் சமூகம் திருந்தாவிட்டால் தேசியம் பயன்படாது என்பது அவர்களுக்குத்தெரியும். அவர்கள் இங்கு வருகையில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாத கட்சியை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி கட்சிக்கு உத்தியோகம் காரணமென்றும் சொல்லிவிடுகிறார்கள். வடதேசத்தில் இந்து மகாசபைக் கட்சியின் தொல்லையிலிருந்து வந்தவர்களானதினால் இந்தக் கட்சியையும் வெறுக்கிறார்கள் தேசியம் பலனளிக்கவேண்டுமானால் கட்சிகளிருக்கத்தான் படாது. கட்சிகளிருந்தாலும் அடிப்படையில் வித்தியாசமிருக்கப்படாது; அடிப்படை வித்தியாசமொழிந்தால்தான் கட்சியின் வித்தியாசமொழியும்.

தேசத்தில் ஆதிக்கம் வகிப்பவர்களான வெள்ளைக்காரர்கள் தாங்களனுபவிக்கும் அதிகார சுகங்களை விட்டுக்கொடுத்தாலே நமக்கும் அவர்களுக்கு முள்ள கட்சிகள் பலவீனப்பட்டுப் புறத்தோற்றமும் மாய்ந்து போகும். எனவே; நமது நாட்டில் சமய உரிமைகள் நூல் வசனங்களாலும் பழமொழிகளாலும் கிரியை சடங்குகளாலும் மறைக்கப்பட்டிருக்கிறது. நமது சனங்கள் தெய்வத்தின் பெயரைச் சொல்லி மனிதனை மனிதன் அவமதிக்கும்படி செய்துவிட்டார்கள். என்பதை கல்வியின் வியாபக அறிவு பரவும் இக்காலத்தில் சமூக முணர்ந்து வருகிறது. கட்சிக்கு அடிப்படையும் அதுவே. இந்தக் கட்சி நீங்கவேண்டுமானால் சமயத்திலும் உத்தியோகத்திலும் பெரிய ஜாதியென்னும் அகம்பாவத்திலும் ஆதிக்கம் வகித்திருக்

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—கிட்கிந்தா காண்டம்

(கட்டுரை—4)

(திரு. சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கங்கள் 17 முதல் 18 முடிய)

வாலி இராமன் எய்த அம்புடன் கீழே கிடந்தான். ஆனால், அவன் தேவேந்திரனால் கொடுக்கப்பட்ட மாலையை அணிந்திருந்தபடியால் அவனுடைய உயிரும், ஒளியும், வலியும் போகவில்லை. இராமன் தம்பியுடன் வாலிமுன் வந்தான். வாலி இராமனைப் பார்த்து தருமத்தை அனுசரித்திருக்கும் சொற்களைச் சொல்லத் தொடங்கினான்.

வாலி, "தசரத மன்னனின் மகனாகிய நீ நான் வேறொருவனுடன் சண்டை செய்திருக்கும்போது என் மேல் அம்பெய்தனையே. நீ, இருப்பதை நான் அறியவில்லை. தாரை எவ்வளவு சொல்லியும் நான் உன்னை யோக்கியனென நம்பி என் தம்பியுடன் போருக்கு வந்தேன். வந்து பார்க்கும்போது உன்னைக் காணவில்லை. நீ இவ்வளவு தீய சிந்தை உடையவனென்றும், நல்லவனைப்போல உருத்தரித்தவனென்றும், புல்லால் மூடப்பட்ட பாழுங் கிணற்றைப் போன்றவனென்றும், தருமத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு பிழைப்பவனென்றும் அறியாமற் போனேனே? உன் நாட்டிலாவது நகரத்திலாவது நான் வந்து செய்த தீமை உண்டா? உனக்காவது செய்த அவமானமென்ன? குற்றமற்ற என்னை ஏன் கொன்றாய்? உன்னுடன் போர் செய்ய வந்தேனா? கொடுமையே உருவானவனே! அரசருக்குரிய அன்னம், புலால் இவைகளைத் தின்கிற நீ மிகவும் கட்டுப்பாடில்லாத பாவி. பிறருடைய பொருளைக் கைப்பற்றுவதில் ஆசையுள்ளவன். அரசர்களுக்குக் காட்டு மிருகங்களை வேட்டையாடுவது இயற்கை என்பவோ? என் மயிர், தோல், எலும்பு இவை ஒன்றுக்கும் பயன்படா. என் புலாலும் பயன்படாது. மேலும் அரசர்கள் குரங்கு வேட்டையாடுவது உண்டா? ஐந்து நகங்களுடைய மிருகங்களில் முள்ளம் பன்றி, பன்றி, உடும்பு, முயல், ஆமை ஆகிய இவ் ஐந்துமே பிராமணரும் அரசரும் உண்ணலாமென்று கூறப்பட்டிருக்கிறது. ஒன்றிற்கும் உதவாத ஐந்து விரலுள்ள என்னை ஏன் கொன்றாய்? சண்டாளனாகிய நீ தசரதனுக்கு எப்படிப்பிள்ளையாகப் பிறந்தாய்? இந்தவல்லமையை உன்னுடைய மனைவியை எடுத்துப் போனவனிடத்தில் காட்டவில்லையே! நீ என்முன் வந்திருந்தால் நொடியில் உன்னை எமனுலகுக்கனுப்பியிருப்பேன். ஒருவராலும் எதிர்க்க முடியாத என்னை மறைந்திருந்து கொன்றாயே? நீ என்னிடம் சொல்லியிருந்தால் உடனே இராவணனிடமிருந்து சீதையை மீட்டுக்கொடுத்திருப்பேனே!" என்று நியாயமாகக் கடாவினான்.

இராமன் வாலியைப் பார்த்து "அறிவில்லாமல் என்னை இகழாதே. உன் தோற்றத்திற்குத் தகுந்தபடி உனக்கு அறிவு ஏற்படவில்லையே. உலகில் சில அரசர்கள் தங்கள் ஆளுகைக்கு உட்படாத மலைகளையும் காடுகளையும் கைப்பற்றி அவைகளிலுள்ள உயிர்களையும் துன்புறுத்துகிறார்கள். ஆனால் இந்த நாவலந் தீவு முழுதும் எங்கள் ஆளுகைக்கு உட்பட்டவை. இப்போது எங்களில் பரதன் நீதி தவறாது அரசாள்கிறான். அவனுடைய கட்டளைப்படி நாங்களும் மற்ற அரசர்களும் உலகில் அறத்தை நிலைநிறுத்த அலைகிறோம். நாங்கள் அவனுடைய ஆணைப்படி தீயவர்களைத் தண்டித்து வருகிறோம். நீ நியாய விரோதமாக உன்னுடைய தம்பியின் மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறபடியால் உன்னைத் தண்டிப்பது நியாயமே. சுக்கிரீவன் எனக்கு நண்பனாயினான். அதனால் அவனுக்கு அரசாட்சியும் மனைவியும் கிடைக்கவேண்டியது. அவன் என் நன்மையை நாடுபவன். நான் உன்னைக் கொல்வதாகவாக்களித்திருக்கிறேன். நான் வாக்கைத் தவறுவேனா? நான் உன்னைக்கொன்றது நியாயமே. சுக்கிரீவன் எனக்குத் தோழன். அவனுக்கு நீ பகைவன். ஆதலின் நீ எனக்கும் பகைவனே. நீ செய்த பாவத்திற்காக உன்னைத் தண்டித்தேன். இன்னுங் கேள்; வேட்டைக்காரர்கள் மிருகங்களை அவைகளின் புலாலுக்காக மறைந்திருந்து வேட்டையாடுகிறார்கள். அதனால் அவர்களுக்குப் பாவமில்லை. பல அரசர்களும் வேட்டையாடுகிறார்கள். நீ மிருகமானதால் நான் உன்னை மறைந்திருந்து கொன்றது நியாயமே. பிறருக்குத் துன்பந்தரும் அரச நீதி பயனற்றதென்று நீ கூறலாம். அரசர்கள் குற்றவாளிகளைத் தண்டிப்பது முறையே. அரசர்கள் எட்டுத் திக்குப்பாலகர்களின் தோற்றமாக உலகில் வாழ்கின்றனர். ஆதலால் என்னை நீ இகழ்வது சரியல்ல" என்றான்.

வாலி இதைக்கேட்டு இராமன் செய்தது நியாயமென்றுணர்ந்து, "இராம! நீ செய்தது நியாயமே என்னை மன்னித்தருள வேண்டும். சுக்கிரீவனைப் போலவே என் மகன் அங்கதனையும் காக்க வேண்டும். உன்கையால் சாக வேண்டுமென்ற ஆசையால் தாரை தடுத்தும் வந்தேன்" என்றனன். இராமன் மகிழ்ந்து "கவலைப்படாதே, பிராரப்த கர்மத்தை உன்னால் விலக்கமுடியுமா?" என்றான். வாலி மன்னிப்புக் கேட்டான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இந்திரன் கொடுத்த மாலையை அணிந்திருந்ததால் வாலிக்கு உயிர் போகவில்லையாம். ஈதெல்லாம் அறிஞர் ஒப்புமாறில்லை. இராவணேச்சுரன் முதலியபெரியாரைக் கண்டுகிடுகிடுவென்று நடுநடுங்கித் தன் உயிரையே பாதுகாக்க முடியாமல் தட்டழிந்தவனாகிய இந்திரனுக்கு மற்றொருவர் உயிரைக் காக்கும் ஆற்றல் எங்ஙனம் அமையும்? அதிலும் அவன் கொடுத்த மாலைக்கே அத்தகைய ஆற்றல் இருந்ததென்பது அறிஞர் எள்ளி நகையாடற் பாலதாயுள்ளது.

வாலி இராமனை நோக்கி பலவாறு இகழ்ந்துரைக்கிறான். அவன் கூறுவன எல்லாம் நெறி முறை திறம்பாமலே உள்ளன. வால்மீகி முனிவரும் வாலி கூறியனவெல்லாம் தருமத்தை அனுசரித்த சொற்கள் என்றே கூறுகிறார். மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்காரும் பக்கம் 55-ல், "வாலி இராமனுடைய செய்கையைக் கண்டித்த வார்த்தைகள் தருமத்திற்கு விரோதமில்லையென்று வால்மீகி மகரிஷியின் கருத்தென்பதைப் பலர் கவனிப்பதில்லை. வாலி வதத்தைப் பற்றின இருவித அபிப்பிராயங்களில் வால்மீகி எதை ஆமோதிக்கிறாரென்று இதனால் தெரிகிறது" என்று குறித்திருக்கிறார். நடுநிலைமை அறிவில்லாதவரும் மூடப்பற்றுடையாருமே இராமன் வாலியைக்கொன்றது முறையானது என்பர்.

வாலி இராமனைப்பற்றிக் கூறுவனவெல்லாம் முற்றிலும் நாம் அவனைப்பற்றி எடுத்துக் குறித்துள்ள உண்மைகளுக்கு மிகப்பொருந்தியுள்ளன. இராமன் பிறரால் மிகவும் நல்லவனென்றெண்ணும்படி பாசாங்கு செய்து வருபவனென்றும், புல்லால் மூடப்பட்டப் பாழுங்கிணறு போன்றவனென்றும், தீயசிந்தை உடையவன் என்றும், தருமத்தைக் காரணமாகவைத்துக்கொண்டு பிழைப்பவனென்றும்வாலி கூறுகின்றான். மேலும் அவன் இராமனைக் கட்டுப்பாடில்லாத பாவி என்றும், பிறருடைய பொருளைக் கைப்பற்றுவதில் ஆசையுள்ளவனென்றும் எடுத்தியம்புகின்றான். இவையனைத்தும் நாம் முன்னர் அங்கங்கே இராமனுடைய செயல்களிலிருந்து விரித்துரைத்து எடுத்துக்காட்டி நிலைநாட்டியவைகளே. முனிவனைப் போல உருவந்தரித்துப் பிறரைஏமாற்றி தனக்கு யாதொரு தீமையும் செய்யாதவனாகிய வாலியை, தனக்கு யாதொரு தீமையும் மனத்தாலும் எண்ணாததோடு மிகவும் நல்லவனென்று நினைத்திருக்கும் வாலியை மறைந்திருந்து வஞ்சகமாகக்கொன்றான் இராமன், என வாலி எடுத்தியம்புவது கல்நெஞ்சையும் கரைக்குமன்றோ! வாலி கூறுவனவற்றை மறுமுறையும் படிக்கும்படி நண்பர்களை வேண்டுகின்றோம்.

மனு நூலில் முள்ளம் பன்றி, பன்றி, உடும்பு, முயல், ஆமைஇவைகளை பிராமணரும் அரசரும் உண்ணலாமென்று கூறப்பட்டிருக்கிறது என வால்மீகி வாலி கூற்றாகக்கூறுகிறார். இதனால் ஆரியருடையகொலைபாதகத் தன்மை இனிது விளங்கும். மலைக்காடுகளிலிருக்கும் அசுத்தங்களை புண்ணும் முள்ளம் பன்றிப் புலாலும், நாட்டிலுள்ள மனிதர்களுடைய மலம் முதலிய அசுத்தங்களைத் தின்னும் பன்றிப் புலாலும் இவர்களுடைய உடலை வளர்க்க இன்றியமையாதனவே! அதிலும் பார்ப்பனர்களும் அரசரும் அவைகளை உண்ணலாமாம். இதனால் அப்பன்றிகள் பெற்ற பேறே பெரும்பேறு! பார்ப்பனரால் கொன்று உண்ணப் பெற வேண்டுமானால் அப்பன்றிகள் எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்!

இனி, இராமன் கூறும் மறுமொழியை ஆராய்வோம். இராமன் வாலியை நோக்கி அறிவில்லாமல் இகழ்ந்துரையாடுகின்றானே யொழிய அறிவுடைய பேச்சு ஒன்றும் பேசவே இல்லை. அவன் பேசும் அயோக்கியத்தனங்களெல்லாம் மிகவும் தெளிவாக சீனிவாசய்யங்கார் இடந்தோறும் இடந்தோறும் தவறாமல் எடுத்துத் தமது மொழி பெயர்ப்பில் அங்கங்கே குறிப்பெழுதியிருக்கின்றார். ஆதலின் நாம் அவர் எழுதும் குறிப்புக்களையெல்லாம் நமது கட்டுரைகளை ஆர்வத்தோடு படிக்கும் அன்பர்களனைவரும் தெரிந்துகொள்ளுமாறு குறித்து அமைவோம். அவர் கூறுவனவற்றைக் கூட்டாமலும் குறைக்காமலும் உள்ளபடியே முன்னர் நாம் குறித்து வருமாறு எழுதுவோம்.

இராமன் வாலியைப் பார்த்து, "அறிவில்லாமல் என்னை இகழாதே உன் தோற்றத்திற்குத் தகுந்தபடி உனக்கு அறிவு ஏற்படவில்லை" என்று கூறுகிறான். இந்த இடத்தில் நமது சீனிவாசய்யங்கார், பக்கம் 59-ல் இது பொதுவான தூஷணையே தவிர பதிலாகாது என்று குறிக்கிறார். இது உண்மையே.

இராமன், "உலகில்சில அரசர்கள் தங்களுக்கு உட்படாத இடங்களைக் கைப்பற்றி அங்குள்ளாரைத் துன்புறுத்துகின்றனர்" என்று கூறுகிறான். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் (பக்கம் 59) இராமனுடையசெய்கை இவ்விதமே என்று எழுதுகிறார். இது மிகவும் பொருத்தமானதன்றோ? இராமன் அயோக்கியத்தனமாகக் கிட்கிந்தை புகுந்து கள்ளத்

தனமாக தமிழ் மன்னனுகிய வாலியைக் கொன்று அவனைச் சேர்ந்தாரையும் மனம் புண்படச் செய்தனனன்றே?

இராமன், "இந்த நாவலந்தீவு முழுதும் எங்கள் ஆளுகைக்கு உட்பட்டவை" என்றனன். இதே மாதிரி முன்னர் கூறியபோது கண்டித்ததைப்போலவே இங்கும் இதைக் கண்டித்துச் சீனிவாசய்யங்கார் குறிப்பெழுதுகிருர். அது வருமாறு:—(பக்கம் 59) "இது உண்மையல்ல. முன் காலத்தில் எப்பொழுதாவது அப்படியிருந்தாலும் தசரதருக்கு இந்த அதிகாரமில்லை; இராமனுக்குக் கிடைக்காது. இப்படியிருந்தால் வாலி, உரோமபாதன், ஜனகன், கேகயராஜா முதலிய அரசர்கள் தசரதருக்குக் கப்பங்கட்டி வந்தார்களா? இதற்குப் பிரமாணமில்லை" எக்காலத்திலும் அப்படியில்லை என்பதே ஆராய்ச்சியாளர் முடிபு என்பதே எமது முடிபும்.

"எங்களில் பரதன் நீதி தவருது ஆளுகின்றான். நாங்கள் அவனுடைய ஆணைப்படி தீயவர்களைத் தண்டித்து வருகிறோம்" என்று இராமன் கூறுமிடத்துச் சீனிவாசய்யங்காருடைய குறிப்புக்கள் வருமாறு (பக்கம் 60) "பரதன் அரசனல்ல; இராமனுடைய பாதுகைகளை அரசனுடைய ஸ்தானத்தில் வைத்துத்தான் சேவகனுக ராஜ்யகாரியங்களை நடத்துகிறான். மேலும் இராமனையாவது மற்ற எவனையாவது மேற் சொன்னபடி ஆக்ஞை செய்ததாகத் தெரியவில்லை. பாதுகைகளைக் கொடுக்கும்போது பரதன் இப்படியாதொன்றும் சொல்லவில்லை. தான் ஆளுவதை ஒப்புக்கொள்ளவுமில்லை. இராமனை 'நீ நாட்டில் ராஜாக இரு. நான் காட்டில் ராஜாவாக இருக்கிறேனென்று அபிஷேகம் செய்துகொள்ளுகிறான்" இந்தக்குறிப்புக்களால் இராமன் கூறுவனவெல்லாம் பொய்யுரைகளே என்பது வெட்ட வெளிச்சமாகின்றது. கட்டுப்பாடில்லாத இராமன் எதை வேண்டுமானுலும் பேசுவானல்லவா?

"நீ நியாய விரோதமாக உன்னுடைய தம்பியின் மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறபடியால் உன்னைத் தண்டிப்பது நியாயமே" என்று இராமன் கூறினுன். இந்த இடத்தில் மொழிபெயர்ப்பாளர் ஐயங்கார் பக்கம் 61ல், "இங்கே சிலர் இப்படிச் சமாதானம் சொல்லுகிருர்கள். தமயன் இறந்தபிறது அவனுடைய பாரியைத் தம்பி கைப்பற்றலாம். சுக்கிரீவன் வாலி குகையில் இறந்தானென்று நம்பி அப்படிச் செய்தான். (அதாவது தாரையைக் கைப்பற்றி அனுபவித்தான்) உண்மையாக இறந்தபிறகும் அப்படியே செய்தான், அதுதோஷமல்ல. ஆகையால் இராமன் அவனைக் (சுக்கிரீவனை) கொல்லவில்லை. தம்பியின் பாரியைக் கைப்பற்றுவது பாபம். மேலும் அவன் உயிரோடிருக்கும்போது செய்வது மகாபாவம். இந்தத் தருமம், கேவலம், மனுஷர்களுக்குள் வழங்கவேண்டுமென்று நமது ஸ்மிருதி கர்த்தாக்கள் விதித்திருக்கிருர்கள். மிருகங்களுக்குஏற்படவில்லை. ஆகையால் இந்தக் காரணத்திற்காக வாலியைக்கொன்றது நியாயமல்ல." 'அவன் மிருகமல்ல, மனுஷயர்களைப் போன்றவன் ஆக்தத்தாமா தர்மங்களுக்குக் கட்டுப்பட்டவன். அதற்காக இராமன் கொன்றான்' என்றால், 'மனுஷ தருமத்தின்படி அவனுடன் தருமயுத்தஞ் செய்திருக்கவேண்டும். கேவலம் மிருகமாகப் பாவித்து அவனை எப்படியாவது கொல்வதற்கு நியாயமில்லை." என்று தெளியக் குறித்திருக்கிருர். இதனுல் எப்படிப் பார்த்தாலும் இராமன் செய்தது அநியாயமே என்பது விளங்குகிறது. நமது ஐயங்கார் மேலே கண்ட குறிப்பில் "தமையன் இறந்தபின் தமையனுடைய மனைவியைக் கைப்பற்றலாம். தம்பி மனைவியைத் தம்பி இறந்தபின் தமையன் கைப்பற்றலாம். இந்தத் தருமம் மனிதர்களுக்கென்று ஸ்மிருதி கர்த்தாக்கள்விதித்திருக்கிருர்கள்" என்று எழுதியிருக்கிருர். இதனுல் ஆரியர்கள் தமையன் மனைவியைத் தம்பியும் தம்பி மனைவியைத் தமையனும் தமையனே தம்பியோ இறந்த பின் கைப்பற்றும் வழக்கத்தை உடையவர் என்பது தெரிகிறது. கணவன் இறந்தபின் கண்டபேர்களுக்கெல்லாம் பெண்டாட்டியாயிருப்பதிலும் உடையவன் ஒருத்தனிடம் இருப்பது மேலன்றோ! இதனை உணர்ந்திருந்தும் தங்கள் ஸ்மிருதி கர்த்தாக்களுடைய விதிகளுக்கு மாருகத் தற்காலத்திய பார்ப்பனர் விதவா விவாகத்திற்கு மாறுபட்டுப் பேசுவது வியப்பாகவே உள்ளது. இராமன் வாலியைச் சுக்கிரீவனுடைய மனைவியைக் கைப் பற்றியதற்குக் கண்டித்து தம்பி மனைவியைத் தன் மகள் போல் கருத வேண்டும் என்கிறான். ஆனுல் தாய்போல் கருதவேண்டிய தமையன் மனைவியை சுக்கிரீவன் கொண்டாண்டபோது பேசாமல் பார்த்திருக்கிறான். இதனுல் தன் மகளை சேருவது தவறு. ஆனுல் தன் தாயை புணரலாம் என்று இராமன் கூறுவது போலுள்ளது. இது தசரத மன்னவன் கண்காண கோசலை முதலியோரை யாகத் தலைவர்கள் கைப்பற்றிப் புணர்ந்து பெற்ற பிள்ளைகள் தானே இராமன் முதலியோர். அதனுல் இராமனுடைய நீதிஒழுக்க முறை இப்படி யிருப்பது அறிஞருக்கு வியப்பைத் தருவது அன்று.

"சுக்கிரீவன் எனக்கு நண்பனுயினுன். அதனுல் அவனுக்கு அரசாட்சியும் மனைவியும் கிடைக்க வேண்டியது" என்று இராமன் கூறுகிருன். இந்த இடத்தில் ஐயங்கார் பின்வருமாறு பக்கம் 62-ல் குறிக்கிருர் "நியாயா நியாயத்தை விசாரிக்காமல் எப்படிக் கிடைக்கும்? சுக்கிரீவனை விசாரித்தவர் வாலியையும் விசாரித்து இருவர்களின் நியாயா நியாயத்தைச் சீர்தூக்கிப் பிறகல்லவோ தீர்ப்புச் செய்யவேண்டும்? தண்டித்த பிறகு காரணம் சொல்லுவதில் பிரயோஜனமென்ன? ஒருவேளை வாலி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்குப் பரிகாரம் செய்யச் சம்மதித்தால் அப்பொழுது இராமன் என்ன செய்வான்? இராவணனிடத்தில் நடந்துகொண்ட நியாயத்தைக்கூட வாலியிடத்தில் காட்டவில்லை. அங்கதனைத் தூதனுப்பினுர். சுகசாரணர்களிடத்தில் இராவணனுக்குச்சொல்லியனுப்பினுர். முதல் நாள் யுத்தத்தின் முடிவில் உன் சம்மதமென்ன என்று கேட்டார். தன்பாரியை எடுத்துப்போன இராவணனிடத்தில் இப்படித் தருமயுத்தத்தை அனுஷ்டித்த ரகுவீரன், தன்பாரியை எடுத்துப் போகாமலும் தனக்கு யாதொரு அபசாரமும் செய்யாமலுமிருக்கும் வாலியிடத்தில் அதருமயுத்தம்செய்து அவனைக்கொன்ருன். சுக்கிரீவனுக்காகக் கொன்றேனென்ருல் இப்படியே விபீஷணனுக்காக இராவணனையும் மறைந்து கொல்வது தருமமாகும். இந்திரன் கொடுத்த தங்கமாலையால் வாலியின் பகைவர்களுடைய பலம் வர வரக் குறைந்து வாலியிடத்தில் சேருகிற தென்ற காரணத்தால் அவனை மறைந்து கொன்ருரென்று சிலர் சொல்லும்சமாதானம் தகாது. இந்திரனைப்பற்றியாவது மாலையைப்பற்றியாவது இராமனுக்கு மாருதியும்சொல்லவில்லை' சுக்கிரீவனும் சொல்லவில்லை" இக்குறிப்பில்இராமன்வாலியை மறைந்துகொன்றது எவ்வாற்றானும் தகாத பாவச்செயலே என்பது விளங்குகிறது. தனக்கு வேண்டியவனுகச் சுக்கிரீவனிருந்தால் அவன் பொருட்டு எத்தகைய தீயசெயலையும் செய்யலாமென்பதே இராமனுடைய தீயசிந்தையின் முடிவுபோலும். இராமன் வாலியை மறைந்துநின்று கொன்றதற்கு அவனுடைய பயங்கொள்ளித்தனமும் பேடித்தனமுமே காரணமல்லாது வேறுகாரணம்இன்மையும் இதனுல் தெளிவாகிறது.

இராமன் "சுக்கிரீவன் என் நன்மையை நாடுபவன். அதனுல் நான் உன்னைச் கொன்றேன்" எனருன். இவ்விடத்தில் நமது ஐயங்கார் பக்கம் 62ல் "வாலி அப்படிப்பட்டவனில்லையென்று இராமனுக்கு எப்படித்தெரியும்? அப்படிப்பட்டவனை அலட்சியம் செய்யத் தகுமா?" என்றுஎழுதுகிருர். இவ்விராமன் கூற்று அறிவிலாதார் கூற்றாகவே உள்ளது.

இராமன், "நான் உன்னைக் கொல்வதாக வாக்களித்திருக்கிறேன். நான் வாக்கைத் தவறுவேனு? எனக்கூறுகிருன். இவ்விடத்தில் நமது ஐயங்கார் பக்கம் 62ல் "இருதிறத்தையும் விசாரிக்காமல் பிரதிக்ஞை செய்தது தவறு. இப்படி முன்யோசனையில்லாமல் தசரதர் கைகேயிடத்திலும் விசுவாமித்திரரிடத்திலும் செய்தார். இராமனும் மானைப் பிடித்துத் தருவதாகச் சீதையிடத்தில் பிரதிக்ஞை செய்தார். ஆகையால் இது குலதருமமென்றே தெரிகிறது" என்றெழுதுகிருர். இதனுல் தசரதன் இராமன் முதலியோர் சுயநலம் கருதி "எண்ணித் துணிக கருமம்" என்றவேத வாக்கை மறந்து மனம்போன போக்கெல்லாம் போகும் அறிவற்றவர்களாக இருக்க வேண்டும், இல்லையென்றால் சுயநலங்கருதித் தாயையும் பெண்டாளக் கூடிய இழிந்த வெறுக்கத்தகுந்த ஒழுக்கத்தினராதல் வேண்டும்.

இராமன், "நான் உன்னைக்கொன்றது நியாயமே. நீ செய்த பாவத்திற்கு உன்னைத் தண்டித்தேன்," என்கிறான். இந்த இடத்தில் (பக்கம் 63) சீனிவாசய்யங்கார், "இது இராமனுக்கு (நியாயமென்று தெளிவாக விளங்கினுலும் பலமான ஆட்சேபனைக்கு இடங்கொடுக்கிறது" என்றும், வாலி செய்தது பாபமே என்று விவாதமில்லாமல் முடிவு செய்யப்படவில்லையே என்றும் எழுதியிருக்கிருர்.

"அரசர்கள் புலாலுக்காக வேட்டையாடுகிருர்கள்" என இராமன் கூறுகிருன். பக்கம் 64ல் சீனிவாசய்யங்கார், "தன் தோலும் பல்லும் எலும்பும் மாமிசமும்உபயோகப்படக் கூடாதவை என்று வாலி நிரூபித்து விட்டான். அரசர்கள் சிங்கம், புலி, யானை, கரடி முதலியவைகளுடன் குரங்குகளையும் சேர்த்து வேட்டையாடினதாகக் கேள்விப்படவில்லை" என்று குறித்துள்ளார்: இராமன் வாயில் வந்ததைக் கூறினுல் அதை அறிஞர் ஒப்பவேண்டாமா? தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்பவனே உண்மையில் பெரியவன்.

இராமன், "நீமிருகமானதால் நான் உன்னை மறைந்து நின்று கொன்றது நியாயமே எனப்புகன்றனன். இதைப்பற்றி நமது ஐயங்கார் பக்கம் 64ல் தான் மறைந்திருந்து அடித்ததைச் சாதிப்பதற்கு வாலியை மிருகமாக இராமன்ஏற்படுத்துகிருன். சுக்ரீவனுடைய பாரியைக் கைப்பற்றினுனென்ற பாவத்தை அவன் மேல் சுமத்தும்பொழுது இதை மறந்து அவனைத் தன்னைப் போன்ற மனிதனுக எண்ணிப் பேசுகிருன் எனக் குறித்தனர். இதனை ஆராயும்போது முன்னே வந்தால் கடிப்பதும் பின்னே போனுல் எதிவதுமாக இராமன் பேசினன் என்பது புலப்படுகிறது.

"பிறருக்குத் துன்பந்தரும் அரசநீதி பயனற்றதென்று நீ கூறலாம்" என இராமன் இட்டுக்கட்டிப் பேசுகிருன். இவ்விடத்தில் நமது ஐயங்கார் (பக்கம் 64) "அவ்வித சந்தேகம் இருக்கிறதாக வாலி தெரிவிக்கவில்லை" என்று குறித்தனர். இதனுல் இராமன் இல்லாததும் பொல்லாததும் பேசும் தன்மையன் என்பது வெளிப்படையாகிறது.

"அரசர்கள் எட்டு திக்குப்பாலகர்களின் தோற்றமாக உலகில் வாழ்கின்றனர். ஆதலால் என்னை நீ இகழ்வது சரியல்ல" என இராமன் கூறினன். இங்கே நமது ஐயங்கார் "இது இராமனுக்கு ஒத்திருக்கும் பட்சத்தில் அவரைப்போன்ற அரச

(தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

# அவர்கள் என்ன பேசுகிறார்கள்?

(அய்யாமுத்து)

தேசிய வாதிகள் இந்தியாவின் உரிமைக்காகப் பாடுபடுவதாகச் சொல்லுகிறார்கள். "சுயராஜ்யம் இந்தியரின் பிறப்புரிமை" என்று கூச்சலிடுகிறார்கள். "சுயராஜ்யம் என்ற வார்த்தை சுயேட்சை, சுதந்திரம் என்ற அர்த்த புஷ்டியுள்ளதாகக் காணப்படவில்லை. ஆதலால் எங்கள் லட்சியத்தை சுயராஜ்யத்திலிருந்து பரிபூரண சுதந்தரம் என்று மாற்றிக் கொள்வோம்" என்று போராடுகிறார்கள். ஆனால், இந்த தேசிய வாதிகள் இந்திய மக்களில் தாழ்த்தப்பட்டும், மிதிக்கப்பட்டும் இருக்கும்படியான பஞ்சம சகோதரரின் சாதாரண உரிமைகளைக் கொடுத்திடயாதொரு காரியமும் செயலில் செய்து காட்டத் தீவிரமாயில்லை. இவர்கள் சுதந்திரக் கூச்சல் பெருகப் பெருக பஞ்சமர்களின் தண்ணீர் தாகமும் அதிகரித்து வருகிறது. அவர்கள் தாகத்தைப் போக்க இத்தேசிய வாதிகளின் நாட்டுக் கிணறுகள் அநுமதிக்கவில்லை.

* * *

"கிராமத்தார்களுக்காக இரங்குகின்றேன்; அவர்களுடைய நன்மைக்கே பெரிதும் உழைக்கின்றேன்; இந்திய நாடெங்கும் பர்டோலி ஆக்கப்பாடுபடுவேன்; ஏழைகளின் பரிதாப நிலைமை எனமனதை அனலிலிட்ட மெழுகு போல் உருகச் செய்கிறது" எனற சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு, ஈரோடுக் கோயிலில் கருப்பனும் பசுபதியும் நுழைந்ததாக வழக்குத் தொடரப்பட்டு அவர்கள் சிறைவாசத்தை எதிர் நோக்கியிருப்பது ஏன் தெரியாமல் போயிற்று? தனது வைதீகப் பார்ப்பனப் பிரசங்க மாரியிலேனும், சுதந்திரக் காங்கிரஸ் மேடையிலேனும் ஏன் இதைப்பற்றி ஒரு வார்த்தையையேனும் இவர் பொழியவில்லை? இத்தகைய வீரருக்குத் தமிழ் நாட்டார் பாமாலைகளும், பூமாலைகளும் சாற்றினார்களாம்! வெட்கம்! வெட்கம்!

* * *

இன்றையதினம் இந்தியா வெல்லாம் ஒரே பேச்சாயிருப்பது வடநாட்டு வாலிபர் பலர் சிறைக்கோட்டத்தில் மடிவதைப்பற்றியதாய் இருப்பினும். பார்ப்பனப் பாதகர்களால் தோற்றுவிக்கப் பெற்ற சாஸ்திரங்கள் நமது பெண்மணிகளில் பல்லாயிரம் பேர்கள் இளமையிலே மணந்து, இளமையிலே புணர்ந்து, இளமையிலே ஈன்று, இளமையிலே மடிந்து போய்க்கொண்டிருப்பதைத் தடுக்க இந்திய சட்ட சபையில் புகுந்திருக்கும் சாரதா மசோதாவை ஆதரித்து ஒரு வார்த்தையேனும் தீர்மானமேனும் இவ்வல்லாய் பட்டேலாவது அவர் அக்கிராசனத்தின் கீழ் அமர்ந்திருந்த மாறுதல் வேண்டாத தீவிர ஒத்துழையாரேனும், உத்தியோகம் ஒழிப்போமென்னும் தேசிய வாதிகளேனும்பூரண சுயேச்சைஎன்ற சுயராஜ்ய வீரர்களேனும் ஒரு வார்த்தையும் செப்பவில்லை.

* * *

பெண்களின் உரிமையை நிலைநாட்டி பெண்கள்விடுதலைக்கும், க்ஷேமத்துக்கும் அடிப்படையான ஒரு சட்டம் நிறைவேறும்தருவாயில் அதைப் பலமாக ஆதரியாத இம்மடையர்கள் சுதந்திர ஓலமிடுவதை என்னென்பது? இந்தியாவுக்குத் திட்டம் வகுத்தவரால், பெரிய தேசியத்தலைவராம், சுயராஜ்யக்கட்சியாரின் சட்ட சபைத்தலைவராம் பண்டித நேரு என்ற குள்ளநரிப் பார்ப்பனர் சட்ட சபையை எட்டிப்பாராமல், "சாரதா மசோதாவை ஆதரியுங்கள்" என்று தந்தி கொடுத்து விட்டாராம். இந்தியாவின் விடுதலையில் கொஞ்சமேனும் சிரத்தை உள்ளவராக இவர் இருந்திருப்பின், "பலத்த வைதீகர்கள் எதிர்ப்புக்கிடையே சாரதா மசோதா தத்தளிக்கும், ஆதலால் நாம் சென்று, நமது பண்டிதத் தன்மையாலும், பார்ப்பனத் தன்மையாலும், தலைவர் தன்மையாலும், வக்கீல் தன்மையாலும் பலமாக வாதித்துப் போராடி ஜெயம் பெறச் செய்வோம்" என்று சாகப்போவதாய் இருந்தாலும் தேசபந்து சி. ஆர். தாஸைப்போல் பாடையேறியேனும் சட்டசபைக்கு தனது ஓட்டைக் கொடுக்க விரைந்தோடியிருக்க மாட்டாரா? இதை விடப் பிரமாதமான வேலை என்ன இவருக்கு வந்து விட்டது?

* * *

மேயோ இந்தியமாதர்களை தனது புத்தகத்தில் அவமதித்து எழுதிவிட்டாள் என்று ஜோராக பேசின தேசியத் தலைவர்கள் இன்றையதினம் தங்களது சட்டசபை வாதத்தால் மேயோவுக்குமற்றொருவிருந்தளித்து விட்டார்கள். பண்டித மாளவியாவின் ஒத்திவைக்கும் பேச்சையும் எம். கே. ஆச்சாரியின்பலமானஎதிர்ப்பையும், கும்பகோணப் பார்ப்பனரின் தூதுவர் கோஷ்டியையும், சர். சி. பி. ராமசாமி அய்யரின் ஆசிகூறும் தந்தியும் கண்டிப்பாய் மிஸ்.மேயோவுக்கு இதற்குள் எட்டியே இருக்கும். இவை அவள்மனதிற்கு பெரியதொரு விருந்தளித்திருக்குமென்பதிலும் சந்தேகமில்லை. மேயோ தனது சிறிய புத்தகத்தால் இந்திய மாதரை அவதூறு படுத்தியது உண்மையானால் அவள் அவ்வாறு அவமதிக்கத்தக்க ஒரு நிலைமையில் பெண்களை வாழவைத்துள்ளது எது என்று நாம் ஆராய்ந்துபார்க்க வேண்டாமா? நமது பெண்களின் தற்கால கேவல நிலைமைக்கு பார்ப்பனப் பாதகப்பண்டிதர்கள் தான் காரணமாவர். இந்திய மாதரை அவமதித்த காரணத்துக்காக மேயோ ஒரு நரகத்துக்குச் சென்றால் அந்நரகம் நமது பார்ப்பனப் பண்டிதர்களின் பிதுர் லோகமாய்த்தான் இருக்கவேண்டுமே யல்லாது வேறிடமாக ஒருபோதும் இராதென்பது திண்ணத்திலும் திண்ணம்.

* * *

1868-ம் வருடம் வரையிலும் பார்ப்பனப் பண்டிதர்கள் தங்கள் சுருதி, ஸ்மிருதி, பழக்கம், வழக்கம், சுபநலம் ஆகியவற்றை அஸ்திவாரமாகக் கொண்டு, ஆங்கில துரைத்தன நீதி ஸ்தலங்களில் அமைச்சர்களாய் அமர்ந்திருந்து (அ)நீதி செலுத்தி வந்தார்கள். அதன் பின்னால் அவர்கள் தீர்ப்புகள் சட்டமாக இயற்றப்பட்டு அவை நாளது வரைக்கும் "இந்து லா" என அமுலில் இருந்துவருகிறது. இந்த சட்டத்தின் 348வது செக்ஷன்படி ஒரு புருஷன் தனது பெண்சாதியோ, பெண்சாதிகளோ உயிருடனிருக்கும் போதே எத்தனை பெண்சாதிகளை வேண்டுமானாலும் மணம் முடித்துக் கொள்ளலாம். செக்ஷன் 349ல் ஒரு பெண்மணி ஒரு கணவனுக்குமேல் மணம் செய்து கொள்ளக் கூடாது என்று தடுக்கிறது. புருஷன் இறந்தால் கூட மறுமணம் செய்து கொள்ளக் கூடாது என்று இருந்த சட்டம்; 1856ம் வருஷத்தில் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட 15வது ஆக்ட் படி அடிபட்டுப் போயிற்று.

* * *

இந்து மதத்தில் விவாகம் என்பது ஒரு சாதாரண ஒப்பந்தமல்ல. ஆனால் அது மிகவும் பரிசுத்தமான ஒரு மதக் கட்டளை ஒரு பெண் ஒரு புருஷனை மணப்பாளாயின் அப்புருஷன் இறந்த பின்னரும் அவள் அப்புருஷனைத் தவிர பிறர் யாரையும் மனதில் எண்ணவுங்கூடாது என்று சொல்லிவரும் தத்துவம் வார்த்தையில் அல்லாது செயலில் அநுட்டிக்கப்படுகிறதா? ஒரு மனைவி உயிருடன் இருக்கும்போது அவளை வீட்டை விட்டுத் துரத்திவிட்டு மற்றொரு மனைவியை எத்தனையோ இந்துக்கள் மணந்து கொண்டு வாழ்கிறார்கள். புருஷன் மனைவியை விலக்குவதால் கெட்டுப்போகாத மதம் மனைவி புருஷனை விலக்கினால் ஏன் கெட்டுப்போகவேண்டும். இத்தகைய மதத்தின் கீழ் பெண்கள் எத்தனைகாலத்துக்கு அவதிப்படுவது? மற்றும் இந்து மதத்தில் ஒரு புருஷன் தன் மனைவியை பகிஷ்கரித்துவிடவும் அநுமதியிருக்கின்றது. பத்துவருஷம் வரையிலும் சந்தான மில்லாத மனைவியையும் பன்னிரண்டு வருஷங்கள் வரையிலும் பெண்மக்களையே ஈன்றிடும் மனைவியையும் பதினோராவது வருஷத்தில் தான்பெற்ற பிள்ளைகளை யெல்லாம் சாகக் கொடுத்த தாயையும் ஒரு புருஷன் தன்னை விட்டு விரட்டிவிட இந்து மதம் போதிக்கிறது.

* * *

ஒரு மனைவி தன் புருஷனுடன் சதா சண்டை போடுபவளாய் இருந்தால் அத்தகைய மனைவியை உடனே தாமதமில்லாமல் விலக்கிவிட வேண்டுமென்பது இந்து மதக்கட்டளை; ஆனால் ஒரு புருஷன் தன் மனைவியிடத்தில் எவ்வளவு கொடூரமாய் இருப்பினும், அவன் குருடனாய் இருப்பினும், மடையனாய் இருப்பினும், தீராத நோயுற்றவனாய் இருப்பினும் ஆண்மை இழந்தவனாய் இருப்பினும், தன்னையும் தனது குடும்பத்தையும் காக்கச் சக்தியற்றவனாய் இருப்பினும். இன்னும் சொல்லத்தகாத எத்தனை பாதகனாய் இருப்பினும் அவனையே தெய்வமாக மதித்து மனைவியானவள் அவன்மீது அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமாம். பெண்கள் என்றால் எவ்வளவு கேவலம் பாருங்கள்; ஒருவன் தான் வாங்கின கடனைத் திருப்பிக்கொடுக்காவிட்டால் மறு ஜன்மத்தில் கடன் கொடுத்தவன் வீட்டில் அடிமையாகவோ பெண்ணாகவோ பிறக்க வேண்டும். என்று நாரதரால் சொல்லப்பட்டிருக்கிறதாம்! மற்றொரு ரிஷிபெண்களுக்கும் அடிமைகளுக்கும் குழந்தைகளுக்கும் ஒரு மனிதனும் கடன் கொடுத்தல் தகாது என்று கட்டளையிட்டு இருக்கிறாராம் மற்றும் இவன் பெண்கள் பெரும் பேதைகளென்றும், சொத்துக்களைப் பெறவும் நிர்வகிக்கவும் யோக்யதை அற்றவர்கள் என்றும் கூறி யிருக்கின்றானும்.

* * *

மனு என்ற பாதகன் பெண்கள் விஷயமாக மிகவும் கொடுமையாக எழுதியிருக்கிறான். இம்மனுஸ்மிருதியே பார்ப்பனர்களுக்கு தற்காலத்தும் தேவ வாக்காக இருக்கிறது. எட்டாவது அத்தியாயம் 416வது சுலோகத்தில் ஒருமனைவிக்கும் புதல்வனுக்கும், அடிமைக்கும் எத்தகைய சொத்துரிமையும் இல்லையென்றும், அத்தியாயம் 9ல் சுலோகங்கள் 2 3-ல் பெண்கள் தங்கள் ஆயுள் பரியந்தம் ஆண்களால் ஆளப்பட்டு வரவேண்டு மென்றும் அதாவது, இளமையில் தகப்பன்கீழும் பருவத்தில் புருஷன் கீழும், முதுமையில் மைந்தர் கீழும் அடிமைப்பட்டு வாழவேண்டுமென்றும் பெண்களுக்கு எக்காலத்தும் சுயேச்சை என்பது அளிக்கப்படலாகாது என்றும் கூறியிருக்கிறார். தனது தகப்பனிடத்திலிருந்து அதிகமான சீதனத்தைக்கொண்டு வந்தவள்தான் மிகவும் நல்ல மனைவி யென்று 5-124லும் ஒரு மனைவியாகப்பட்டவள் சமுத்திரத்தில் இணைக்கப்பட்ட நதிபோல் தன் புருஷனுடன் இணைக்கப்பட்டிருக்கிறாள் என்று 9வது அத்தியாயம் 22வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறான். இராமாயணம் சுந்திரகாண்டம் 5வது சுலோகத்தில் பஞ்சமர்களையும் மிருகங்களையும் பெண்களையும் இருப்புச் சங்கிலியால் இணைத்திருப்பதைப்போல்

(தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க)

## படேல் பதட்டம்

(தமிழ்நாடு எழுதுவது)

தமிழ் மாகாண மகாநாட்டில் தலைமை வகிக்க தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்த திரு. வல்லபாய் படேல் வீண் விவாதத்தில் இறங்கிவிட்டார். வேதாரண்யம் புறப்படுவதற்குமுன், நாம் அவரை சென்னையில் சந்தித்த போது, தென்னாட்டு அரசியல், சமய—சமூக சிக்கல்களை வட நாட்டார் அறியமுடியாதென்றும், அதைக் குறித்து அவர் பேசாமல் இருப்பதே நலமென்றும் தெரிவித்துக்கொண்டோம். ஆனால், பிராம்மணரல்லாத ஒருவன் சொல்லும் வார்த்தையை அவர் கவனிப்பாரென்றும் எதிர்பார்க்கவே இல்லை. அதுபோலவே அவரும் நடந்து கொண்டுவிட்டார். பாஞ்சாலத்திலுள்ள ஹிந்து—முஸ்லிம் தகராறுகளை, தென்னாட்டார் சரியாக அறிந்து கொள்ளுவது மிகவும் கஷ்டமாகும். அதுபோலவே இங்குள்ள பிராமணர் பிராமணரல்லாதார் விசாரத்தை மகாத்மா காந்தியே அறிந்து கொள்ளத் தவறிவிட்டாரென்பதை யாவரும் அறிவார்கள். மகாத்மாவால் முடியாத ஒரு காரியத்தை திரு படேலும், திரு. ராஜகோபாலாச்சாரியும் சாதித்துவிட முடியுமென்று நாம் நினைக்கவில்லை. குருகுல விவாதம் ஏற்பட்ட போது மகாத்மா செய்த தவறு மிகவும் பெரியது. சமபந்தி போஜனம் வேண்டியதுதான் என்று ஒரு பக்கம் சொல்லிவிட்டு, பிறப்பிலே உயர்வுதாழ்வு உண்டு என்று மற்றொரு பக்கத்தில் அவர் கொடுத்த அபிப்பிராயத்தை யாவரும் அறிவார்கள். இந்தியாவின் வீழ்ச்சிக்கு வர்ணாசிரமமே காரணமென்பதை உலகம் ஒப்புக்கொண்ட விஷயமாகும். அரசியல் வேலையாக வந்த திரு படேல் தர்ப்புத்திகள் பேச்சைக் கேட்டு, தென்னாட்டிலுள்ள பிராமணரல்லாதாரை அனாவசியமாகத் தூற்ற ஆரம்பித்துவிட்டார். படேல் செய்துள்ள தியாகமும், அவருடைய நய ஒழுக்கமும் போற்றற் குரியதாகும். ஆனால், தென்னாட்டிலுள்ள பிராமணரல்லாதாரைக் குறித்து, திரு. ராஜகோபாலாச்சாரியார் போன்றவர்கள் கூறியதைக் கேட்டுக் கொண்டு, பொறுப்புள்ள திரு. படேல் பேசி வருவது கண்டிக்கத்தக்க விஷயமாகும்.

தென்னாட்டு விஷயத்தை உள்ளபடி அவர் அறிய ஆவல் கொண்டிருந்தால், பிராமணரல்லாதாரிடமும் அதைக்குறித்து அவர் கலந்திருக்கவேண்டும். அதைவிட்டு, ஒரு சார்பான அபிப்பிராயத்தைக் கொண்டு தம்முடைய பேச்சை முடிவு கட்டியிருப்பது உயர்ந்தவர்களுக்கு அழகல்ல. ஆண்மையிலும், அன்பிலும், தேசசேவையிலும் சிறந்தவர்கள் பிராம்மணரல்லாதாரில் கணக்கற்றவர்கள் இருக்கிறார்கள். தம்முடைய தமிழ் நாட்டு யாத்திரையில்

# திரு: படேல்

[திரு: படேல் இம்மாகாணத்தில் தமிழ் பத்திரிகைகளையே ஒருவரும் படிக்கக்கூடாது என உளறுகின்றார். இவரை ஏனைத் தமிழ் பத்திரிகைகள் என்னவென்று கூறுகின்றன என்பதாய்க் கீழ்வரும் எடுத்துக் காட்டுகளால் நிரூபிப்பது நமது கடனாகின்றது.] (ப-ர்.)

தம்மைச் சுற்றிக் கொண்டிருக்கும் பிராமணர்களைத் தவிர, மற்றவர்கள் எல்லோரும் தேசபக்தியற்றவர்கள் என்று திரு. படேல் நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகி விட்டது. ஸ்ரீ பட்டேலுக்கு பாதபூஜை செய்தும், அவர்கூடத் திக் விஜயம் செய்தும், நல்ல பேரும், "தேசிய கீர்த்தி"யையும் பெற வேண்டுமென்ற எண்ணம் கொண்ட பிராமணரல்லாதார் தென்னாட்டிலில்லை என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சமய—சமூக சண்டைகளால் தேசிய இயக்கம் செய்து போகக்கூடாதென்பதில் ஸ்ரீ படேலை விட, அதிக கவலை கொண்டவர்கள் தென்னாட்டிலும் உண்டு. ஆனால், அந்த விசாரத்துக்கு பரிகாரம் தென்னாட்டார்கையிலிருக்கிறதேயன்றி படேல், பண்டிதர் போன்றவர்கள் கையிலில்லை. பிராமணர் பிராமணரல்லாதார் சச்சரவு ஏன் ஏற்பட்டது? அதன் ஆதியந்தமென்ன? என்பதை அலசிப் பார்க்க சக்தியற்ற திரு. படேல், அவ்விஷயத்தைக் குறித்து சென்ற விடமெல்லாம் பேசி வருவதைக் கண்டு நாம் மிகவும் வருந்துகிறோம். திரு படேல் பேசிவருவது நல்ல எண்ணத்துடனிருப்பினும், அதன் பயன் அவருடைய எண்ணத்திற்கு மாறாகப் போய்விட்டது. பலவிடங்களில் திரு. படேல் பேசியதைக் கேட்டபிறகு, பிராமணரல்லாதார் மனம் மிகவும் புண்பட்டிருக்கிறதென்பதை அவர் அறியும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த விபரீத காரியத்துக்கு திரு. ராஜகோபாலாச்சாரியார்தான் காரணமென்று நாம் கருதுகிறோம். பத்து வருஷங்களுக்குமுன் திரு ஆச்சாரியார்கொண்டிருந்த ஆசாரசீர்திருத்த கொள்கைகளைப் பற்றி, இப்போது திரு. படேல் அறிவாரானால், இந்த ஆச்சாரியார் சொல்லும் அபிப்ராயங்களை திரு. படேல் பொருட்படுத்தியிருக்கவேமாட்டார். இத்துடனாவது இவ்விஷயத்தைக் குறித்து பேசுவதை திரு. படேல் நிறுத்திக்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

## "ஐயங்கார் பத்திரிகை"

தமிழ்நாடு எழுதுவது

ஐயங்கார் வாரப் பத்திரிகை ஒன்றிற்கு காங்கிரஸ் பணத்திலிருந்து 2 ஆயிரம் ரூபாய் கொடுத்திருப்பதாக ஒரு வதந்தி உலாவுகிறது என்று சென்றவாரம் நாம் எழுதியிருந்தோம். அது உண்மையாயிற்று.

---

'தேசபந்து' பத்திரிகைக்கு 2 ஆயிரம் ரூபாய் கொடுத்த உண்மை வேதாரண்யம் விஷயாலோசனைக் கூட்டத்தில் வெளியானதை நண்பர்கள் நேற்று "தமிழ்நாடு"வில் படித்திருக்கலாம். இது மிகவும் கண்டிக்கத்தக்க விஷயமாகும். காங்கிரஸ் பணத்தை தம்மை ஆதரிக்கும் ஒரு பத்திரிகைக்கு திருசீனிவாச ஐயங்கார் கொடுத்தது அக்கிரமமான செய்கை என்பதை யாரும் ஒப்புக் கொள்ளுவார்கள். இனிமேலும் இம்மாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தமிழர் கடமை.

## 'வேதாரண்யம் மகாநாடு"

—0—

(வார வர்த்தமானி எழுதுவது)

மாகாண மகாநாடுகளுக்கு அந்தந்த மாகாணங்களிலுள்ளவர்கள் தலைமை வகிப்பதே மரபும் ஒழுங்குமாகும். ஒரு மாகாநாட்டிலுள்ள குறைகளை மறு மாகாணத்தார் அறிய மாட்டார்கள். 'பாம்பறியும் பாம்பின் கால்' என்றபடி மாகாணக் குறைகளை மாகாணத் தலைவர்களே அறிந்திருக்க இடமுண்டு. இக்காரணத்தால் வெளி மாகாணத்திலுள்ள ஒருவரை தமிழ் மாகாண மகாநாட்டுக்குத் தலைவராய்த் தேர்ந்தெடுக்க யோசனை உண்டானபோதே நாம் ஆக்ஷேபித்ததை நேயர்கள் அறிவார்கள். கடைசியில் சர்தார் படேல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சர்தார் படேலின் தேசபக்தியும் மனவுறுதியும், அடக்கியாளும் திறனும், உத்தம குணங்களும் உலகப்பிரசித்தமானவை. மகாத்மா காந்தியின் பிரதம சிஷ்யர் ஆனதுபற்றி அவருக்கு ஒரு தனி மதிப்புமுண்டு. ஆனால், தென்னாட்டு அரசியல் சமூக நிலைகளையும் குறைபாடுகளையும் அவர் அறியவே அறியார். அதை அவரே ஒப்புக்கொண்டுமிருக்கிறார். தென்னாட்டுக்கு வரும் வட நாட்டுத்தலைவர்கள் தான்றோன்றித் தலைவர்களின் பேச்சை நம்பி தென்னாட்டு அரசியல் சமூக விஷயங்களைப்பற்றிப் பொது கூட்டங்களில் வாயும் தலையுமின்றிப் பேசுவதும் அப்பால் பொது ஜனப்புகாருக்கு இலக்காவதும் ஒரு பெருவழக்காக இருந்து வருகிறது. மகாத்மா காந்தி, தேசபந்து, தாசர், பண்டிதமாளவியா முதலியோர் தென்னாட்டு உண்மை நிலையை உணராமல் பல இடங்களில் பேசி அலைந்தைப் பட்டரை புலகம் மறந்திருக்க முடியாது. இப்பொழுது சுத்தாத்மாவான சர்தார் படேலும் அவர்களைப் போலவே ஏமாற்றப்பட்டு விட்டார். சென்னையிலிருந்து நேரடியாக வேதாரண்யம்செல்ல உத்தேசித்திருந்த சர்தாரை திரு சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் திருச்செங்கோட்டுக்கு இழுத்துக் கொண்டு சென்றபோதே ஏதோ சூழ்ச்சி நடக்கப் போகிறதென்று நாம் சந்தேகப்பட்டதுண்டு. கடைசியில் நாம் சந்தேகம் கொண்டது சரியாயிற்று. தென்னாட்டு அரசியல் சமூக விஷயங்களை திரு. ஆச்சாரியாரிடத்தில் கேட்ட சர்தார் திரு ஆச்சாரியார் போதித்தவைகளை எல்லாம் வேதாரண்யம் மகாநாட்டில் அப்படியே கக்கிவிட்டார். அவ்விஷயத்தைக் கிண்டிக்கிளறி வழவழக்க வெளியாக்க நாம் விரும்பவில்லை. வெளி மாகாணங்களிலிருந்து வரும் சில தலைவர்களிடத்து விஷயங்களைத் திரித்துக்கூறி அவர்களைக் கொண்டு தமக்கு அநுகூலமாகப் பிரசாரம் செய்விப்பதினால் ஏதேனும் நன்மை விளையக் கூடுமா என்று கேட்கிறோம்.

தென்னாட்டில் தோன்றிய பிராமணர் பிராமணரல்லாதார் சச்சரவு நாளுக்கு நாள் முற்றி வயிரமோடிருக்கிறதே தவிர குறையும் லக்ஷணத்தைக் காணோம். இந்தச் சச்சரவு நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு போவது இருதிறத்தாருக்கும் க்ஷேமமாமோ? சச்சரவுகளுக்குக் காரணமான காரணங்களை ஆராய்ந்து அவைகளைச் சரிப்படுத்த முயலுவதன்றோ சிறந்தமுறை.

ஒரு இடத்தில் "ஹிந்து மதத்தைத் தூய்மைப்படுத்தும விஷயத்தில் எனக்கு நன்றாக தெரிந்தவர்களான ஸ்ரீயுத எஸ். சீனிவாஸய்யங்கார் அல்லது மகா கனம் தங்கிய வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியார் இவர்களினும் மேன்மை வாய்ந்த பிராமணர்கள் யார் இருக்கிறார்கள்?' என்று சர்தார் கேட்கிறார். மேடைப் பிரசங்கங்களில் இவ்விரு கனவான்களும் பெரிய சீர்திருத்தக்காரர்களாகத் தோன்றியிருக்கலாம்; ஆனால் இந்து மதச் சீர்திருத்தத்துக்காக அவர்கள் கிரியாம்சையில் எதாவது செய்திருப்பதாக ஸ்ரீசர்தாருக்குச் சொல்லமுடியுமா? குருகுலப் போராட்ட காலத்தில் சர்தார் அபிப்பிராயப்படி 'மாசற்றவரும் பிராமணீயத்தின்பிற்போக்கு எதுவும் தம்மிடம் காணப்படாதவரும்; ஏழைகளும், பிறரால் இம்சிக்கப்படுபவர்களுமான பிராமணரல்லாதாருக்கு ஊழியஞ்செய்யத் தமதுஆயுளையே அர்ப்பணம் செய்துவிட்டவருமான "திரு. ராஜகோபாலாச்சாரியார்" என்ன செய்தார் என்பதை சர்தார் அறிவாரா? சபர்மதி ஆச்"சிரமத்தில்" பிராமணர்களும் பிராமணரல்லாதார்களும், தீண்டாதார் என்று அழைக்கப்படும் தங்களுடைய சகோதரர்களுடன் ஒரே சமைய லறையில் புசிக்கிறார்கள்" என்று

## பம்பாயில் தீண்டாதார் வெற்றி

பம்பாயில் தாதார் என்னுமிடத்தில் சனிக்கிழமை பிள்ளையார் சதுர்த்தியன்று அவ்விழாவை நடத்த ஏற்பாடு செய்தவர்கட்கும் அநேகம் தீண்டப்படாதார்கட்கும் சண்டை ஏற்படும் போலிருந்தது. தீண்டப்படாதார் யானைமுகக் கடவுளை வைத்திருக்கும் அறைக்குள் தங்களைப் போக விடும்படி கேட்டு, அவரை வழிபடத் தங்கட்குள்ள உரிமையை நிலைநாட்ட முயன்றனர்.

வைதீகர்கட்குத் தலைவரான டாக்டர் ஜாவல் என்பவர் முதலில் அவர்களை விட மறுத்துவிட்டார். பெரும் குழப்பமுண்டாயது. ஆனால் நிலைமை வரவர மோசமாகி வருவதையும் நிமிடத்திற்கு நிமிடம் தீண்டாதார் நெருங்கி வருவதையும்பார்த்து அவர் தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டார். எனவே தீண்டாதார் வெற்றிமாலை அணிந்து உள்ளே புகுந்தனர்.

இச்சச்சரவு சுமார் 9 மணிநேரம் நடந்தது. கட்டாயம் சண்டை ஏற்படும் போலிருந்தது. இத் திருவிழா நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றது. இவ்வாலயப்பிரவேச வாதம் சென்ற ஆண்டில் துவங்கியது. தீண்டப்படாதார் டாக்டர் ஆம்பெட்கார், சமூக சமவுரிமை சங்கம் முதலியோரின் தலைமையில் இவ்விழாவில் தங்களையும் கலந்துகொள்ள அநுமதிக்குமாறு இவ்விழாவை நடத்துபவர்களுடன் ராஜி பேசிவந்தனர்

இவ்வாண்டில் இத்திருவிழா மானேஜிங் கமிட்டியார் தங்களின் முந்திய முடிவை மாற்றிக்கொண்டதாகவும், கணபதி அறைக்கு அருகிலோ அல்லது உள்ளோ தீண்டப்படாதார் யாரையும் விடப்படமாட்டாது என்றும் தெரிவித்தனர். இதைப்பார்த்துத் தீண்டாதார் ஆச்சரியமுற்றனர்.

### போலீசாரை வைத்திருத்தல்

சனிக்கிழமை காலை அதிக குழப்பமேற்பட்டது. திருவிழாவை நடத்துபவர்கள் மிகுந்த எச்சரிக்கையான ஏற்பாடுகளுடனிருந்தனர். விநாயகர்பாலத்திற்கு அருகிலிருக்கும் அந்த அறையை பலமாக பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது. கையில் தடிகளுடன் ஒரு லாரி நிறைய சிப்பாய்களை கொண்டு வந்து ஒரு மூலையில் வைத்திருந்தனர். அறைக்கு வெளியில் சுமார் 1,000 தீண்டாதார்கள் கூடி தங்களை உள்ளே விடும்படி கேட்டனர். மிகுந்த கஷ்டத்தோடு டாக்டர் ஆம்பெட்கார் கூட்டத்தாரை அமைதியுடனிருக்கும்படி செய்தார். பின்னர் தாதார் கணேச உற்சவத் தலைவரான டாக்டர் ஜாவேலுடன் ராஜி பேசினார். முதலில் அவர் "இவ்வாண்டில் சமாதானம் செய்ய முடியாது" என்று சொல்லி மானேஜிங் கமிட்டியின் தீர்மானத்தைப்பற்றி யோசிக்க மறுத்துவிட்டார். தீண்டாதார் தலைவர்கள் தங்களை உள்ளே விடவேண்டுமென பரிந்து கேட்டனர். இவ்விதம் வேண்டிக் கொண்டது பயன்படாது போகவே தாங்கள் உள்ளே பலாத்காரமாய் நுழைந்து விடுவோமென்று பகிரங்கமாய் பயமுறுத்தினர்.

கடைசியாக உற்சவத்தை நடத்துபவர்கள், நிலைமை மோசமாவதைப் பார்த்து சமாதானம் செய்து கொள்வதுதான் நல்லதென்று தீர்மானித்தனர். மானேஜிங் கமிட்டி பிற்பகல் மூன்று மணிக்குப் பிறகே பதில் தெரிவித்தனர். அவர்கள் தீண்டாதார்களை அந்த தற்கால ஆலயமாய அறைக்குள்போய் வழிபட அநுமதித்து விட்டனர். தீண்டாதார் பெரும் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர். இதன் பின்னர் மானேஜிங் கமிட்டியார் தங்களின் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் அறிகுறியாக ஒரு மோசுரையும் ஒரு மாங்கையும் (தாழ்ந்த வகுப்பில் ஜாதிப் பிரிவு) ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர். இவ்விதமாக இவ் விவாதம் திருப்திகரமாய் முடிந்தது.

டாக்டர் ஆம்பெட்கார், டாக்டர் பிரதான், திரு. பிரதான், திரு. கிருஷ்ண அய்யர், திரு. ஏ. எச். குல்கார்னி, மற்றும் பலரும் இவ் விராஜிப் பேச்சில் முதன்மையாக நின்று வேலை செய்தனர். (திரா-வி)

---

சர்தார் வேறேரிடத்துக் கூறுகிறார். இந்த உத்தமமான சபர்மதி ஆச்சிரம ஆசாரத்தைப் பின்பற்ற திரு. சக்கரவர்த்தி ஆச்சாரியாரோ வேறு பிராமணத்தலைவர்களோ தயாராயிருக்கிறார்களா? சர்தார் உண்மை நிலையை உணராமல் ஏதோ புராணம் படித்துவிட்டதைப் பற்றி மிக வருந்துகிறோம்.

அப்பால் ஒத்துழையாமையே இந்தியாவின் கதி மோக்ஷத்துக்குச் சிறந்த வழி என்று சர்தார் சொல்லுகிறார். ஒத்துழையாமை ஒரு உயர்ந்த லக்ஷியமாயினும், இந்தியாவின் தற்கால நிலைமையில் கிரியாம்சையில் கொண்டுவர சாத்தியமில்லையென்று ருசுவாகிவிட்டது. ஆகவே அவ்விஷயத்தைப்பற்றி மேலும் வாதம்செய்து கொண்டிருப்பதில் பயனில்லை.

---

திருசெங்கோடு:—இங்கு ஆரம்ப ஆசிரியர்களின் விசேடக் கூட்டமொன்று 31-8-29-ல் நடைபெற்றதென்றும், அதுகாலை பல ஆசிரியர்கள் எழுந்தருளியிருந்தனர் என்றும், கூட்டத்தில் திரு. ஆர். எம். சாலூர் தலைமை வகித்தனர் என்றும் அறிவிக்கப்படுகின்றது.


ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள்.

காப்பிக் குடியை ஒழிக்கும்,

# றேப்பி பவுடர்

காப்பிக்கு பதிலாக சாப்பிடுவதும் கஷ்டமா?

நறு மணம்! பெருங் குணம்!! தரும் ருசி!!!

ஆவரம்பூ, ரோஜா, நன்னாரி, கோதும்பை முதலான உயர்ந்த மூலிகைகளால் தயார் செய்யப்பட்டது.

பலஹீனம், தாகம், உஷ்ணம், பித்தம், மலக்கட்டிதுகளை நீக்கிப் புஷ்டியைத் தருவதில் நிகரற்றது.

விலை ¼ பவுண்டு பொட்டணம், டஜன் ½. ரூ. 1—10—0, டஜன் 1. ரூ. 3—0—0.

அயல் நாட்டுக்கு முன் பணம். [வி. பி. சார்ஜ் வேறு] சாம்பிலுக்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்புக.

S. V. ராஜப்பா றேப்பி பாக்டரி பழனி S. I.

கிடைக்கு மிடம்:—T. A. A. சாமி பிரதர்ஸ் விட்டவாசல், மதுரை.

M. ரெங்கநாதன் நமுனுக்கொல்லை, சிலோன்.

# 'சித்தாந்தம்' ஆசிரியரின் சூன்ய நிலை

மணலி வீதியில் தருமச் சோறு உண்ணும் ஒரு பார்ப்பனரல்லாத மாணவர் குற்றம் செய்ததாகக் கருதி, அத்தகைய குற்றத்திற்குக் கசை கொண்டு தாக்கிய சைவம் பழுத்த 'சித்தாந்தம்' ஆசிரியனார் பாலசுப்ரஹ்மண்யம் "சைவக் குறும்பு" என்னும் தலைப்போடு தம் அழகிய 'சித்தாந்தம்' என்னும் மாசிகையில் ஓர் கட்டுரை வரைந்திருக்கின்றார்.

இவ்வாசிரியனார் மரக்கறி தின்று மகாதேவனைத் தினம் இறைஞ்சி நிற்கும் ஓர் சைவம் பழுத்த திருமேனியுடையார். சிவ காருண்ய வள்ளல். பிறரை தன்வழிப்படுத்த அருநெறியில் தண்டனை புரிவதில் சிறிதும் பின்னடையார். சட்டம் கற்றவர்; பி. ஏ., பி. எல்., பட்டம் பெற்றவர்; மரக்கறி உண்டு உடல் பருத்தவர்; அறச்சாலையை மேல் பார்த்தும், உள்பார்த்தும் வருபவர். இவர் கட்டுரையை ஆராய்வாம்:—

(1) "'திராவிடன்' 'குடியரசு' பத்திரிகைகளில் வெளிவரும் ......பொருந்தாமை பொய்ம்மை முதலியவற்றை ஆராய்ந்து நாம் (சித்தாந்தம்) வெளியிடத் தொடங்கிய நாள்தொட்டு நமது பத்திரிகை தமிழ் நாட்டுக்குச் செய்து வரும் பணியைப் போற்றி நூற்றுக்கணக்கான சந்தாதாரர்கள் நமது பத்திரிகையை வாங்கத் தொடங்கி ஆதரவளித்து வருகின்றனர்"

என வரைகின்றார்.

ஆராச்சியில் வலிமை மிக்க ஆசிரியர் கூற்றை நாம் மேம்போக்காக நோக்குவது நேர்மையல்ல. எனவே, இதனைத் துருவியே ஆராய்வாம்:— திராவிடனும், குடியரசும், பொருந்தாமையும் பொய்ம்மையும் கூடிய கட்டுரைகளை வெளியிடுகின்றன. இதற்குச் சான்று, இப்பொய்ம்மையினையும் பொருந்தாமையினையும் தெள்ளத் தெளிய மக்கட்கு விளக்கிக் காட்டும் பேரறிவு முத்துகின்ற 'சித்தாந்தம்' பத்திரிகையை நூற்றுக் கணக்கான சந்தாதாரர்கள் வாங்கி ஆதரிக்கின்றார்கள் என்பதே. நாம் வெளியிடும் கட்டுரைகள் மெய்ம்மையைப்பற்றி நிற்கின்றனவாகவே நாம் இற்றைக்கும் கருதுகின்றோம். நமது பொய்யை விளக்கி மெய்யை நிலை நாட்டி அறிவுச் சுடர் கொளுத்தும் 'சித்தாந்தம்' பத்திரிகைக்கு எத்தனை சந்தாதாரர்கள் உள்ளனர் என்பதை இவ்வாசிரியர் நமக்கும் பொது சனங்கட்கும் அருள் கூர்ந்து எடுத்துரைத்தல் வேண்டும். செங்கற்பட்டு மகாநாட்டு நிகழ்ச்சியின் பின்னர், இவ்வாசிரியர் கூற்றுப்படி 'சித்தாந்தம்' இவ்வாறு மாதகாலத்தே குறைந்த தொகையில் 500 சந்தாதாரர்களால் மிகுந்தும் பரவி இயக்குதல் வேண்டும். 500 ஏன்? "தன் பத்திரிகைக்கு ஒரு சிறிய நூறு சந்தாதாரர்களாயினும் சேர்ந்திருக்கின்றனரா என்பதை இவ்வாசிரியர், இவர் நாள்தோறும் வணங்கியேத்தும் மகாதேவன் மீது ஆணையிட்டு மெய்ப்பிக்க முன் வருகின்றனரா என்று கேட்கின்றோம். மேலும் இப்பத்திரிகைக்கு ஒரு தொள்ளாயிரம் சந்தாதாரரும் மொத்தத்தில் உளரோ? யார் பொய்யர்? பொய்ம்மை இருக்கும் இடமும் மெய்ம்மை இருக்குமிடமும் இவர் கூறும் விடையில் இனிது புலனாகும்

(2) நாஸ்திகத்தையும் உண்மைச் சைவத்தையும் பரப்புவதற்காக ஏனைய உயரிய பத்திரிகைகளோடும் ஆசிரியன்மாரோடும் நாம் ஒத்துழைக்கத் தலைப்பட்ட நாள் முதல்...... அழுக்காறு உண்டாயிற்று.

நாஸ்திகத்தையும் உண்மைச் சைவத்தையும் பரப்பும் ஏனைய உயரிய பத்திரிகைகள் யாவை? நாத்திகமும் உண்மைச் சைவமும் ஒன்றேயென்று நிலைநாட்ட 'சித்தாந்தம்' பேராசிரியர் முன்வந்தமை வியத்தற்பாலதே! இவர் நா, நாவென்று நாத் தடுமாறி 'ஆவ' 'நாவாகத்' தம் பத்திரிகையில் வெளியிட இவர் நாத்திகத் தியானத்தடிப்பு எத்துணை நிறை பெற்று நிற்கின்றது என்பதை இவர் கம்மத் தூற்றப் புறப்பட்ட கட்டுரையே எடுத்துக் காட்டுகின்றது. குடியன் மயக்கெய்துவான்; வெறியன் மயக்கெய்துவான்; 'சைவத்' திருமேனிகள் இவ்வாறு மயங்கித் திரிபடைதல் ஏனைய உயரிய பத்திரிகைகள் தம் வாசனையின் பலன் போலும்! அற்றன்று; சினம் பொங்கி அதன் வயப்பட்டு நாம் கருத்தழிந்தோம் என்பரேல், இத்தகைய சீர் குலைவை இவரது மகாதேவ வழிபாடு காப்பாற்றவில்லையே என்று நாம் வருந்துகின்றோம். திராவிடனையும், குடியரசையும் ஆராய்ச்சியென்ற ஓர் செயலின் பேரில் படித்துப் பொருமை படைத்துத் தட்டழிந்த இவரை நாம் என்னென்போம்? அழகிய, அரிய அறிவின் வினை முற்றிய ஆராய்ச்சிக்கு நாத்திகத்தையும் உண்மைச் சைவத்தையும் பரப்ப முற்பட்ட இவ்வாசிரியர் குழு இத்தமிழ்நாடு எங்கணும் மலிக!

(3) "குடியரசு" "திராவிடன்" பத்திரிகைகளைப் படிப்பதின் பயனாக அவ்விடுதியில் உள்ள பார்ப்பனரல்லாத மாணவர்கள் பார்ப்பன மாணவர்களைப்பெரிதும் உபத்திரவப்படுத்துகின்றனர்."

குடியரசும், திராவிடனும் பார்ப்பன மாணவர்கள்மீது பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குப் பகைமை விளைக்கின்றது என்பதாம். இவ்விடுதியிலுள்ள பார்ப்பனரல்லாத மாணவர்கள் எல்லோருமாகவே இத்தகைய பகைமைப் பயன் நம் பத்திரிகைகளைப் படித்துக் காண்கின்றனராம்! இவ்வாசிரியர் சில மாணவர்கள் என்றாயினும் பல மாணவர்கள் என்றாயினும் கூறாது, விடுதியிலுள்ள பார்ப்பனரல்லாத மாணவர்கள் (அனைவருமே) என்றார். அவ்விடுதியில் பார்ப்பனரல்லாத இம்மேற்பார்வையாளரும் பார்ப்பனரல்லாத மாணவர்களும் தாம் பார்ப்பனரல்லாதார். இவ்வகுப்பு மாணவர் அனைவரும் குடியரசுத் திராவிடனால் வேறுபட்டனர் என்பது முழுப்பொய்யாக இருத்தல் வேண்டும்; இல்லையேல் நமது பத்திரிகைகளின் சிறப்பைஇவர் தன்னறிவின்றியே ஒப்புக் கொள்ளுகின்றார். இவ்விடுதியில் 40 பார்ப்பனரல்லாத மாணவர்கள் இருப்பரேல், அவர்கள் அனைவரும் ஒருங்கே குடியரசு திராவிடன் வயப்பட்டனர் எனில் யாம் எய்தும் உவகை. அம்மம்ம! மிகப் பெரிதே!! இவ்வுண்மை அறிவுடையவர் யாவர் என்பதை விளக்கிக்காட்டி, குடியரசு திராவிடனின் நற் பணியை நிலைநாட்டிப் போதருகின்றது. பகைமை என்பது தீயதன்றோ எனின்? நாஸ்திகம் பழுத்த சைவப் பேராசிரியர் கண்களில் உரிமை நாடல் பகைமையாகத் தோற்றுகின்றது போலும்!

(4) "பார்ப்பன மாணவர்களையும் பார்ப்பனரல்லாத மாணவர்களையும் நாம் தண்டித்ததுண்டு"

என்றனர்.

குறும்புகள் செய்தமைக்கு 'டசன்' கணக்கில் பிரம்பு கொண்டடிக்கும் இக்கருணாகர வள்ளல், திருஞானசம்பந்தன் கழுவேற்றிய செயலை நம் மனத் தோற்றத்திற்கு முன் கொண்டு வருகின்றனரே யன்றி பிறிதொன்றில்லை. சமணரையும், உலகையும் நல்வழிப்படுத்த முன் வந்த அஞ் ஞானசம்பந்தனை உபாசனாமூர்த்தியாகக் கொண்ட இவர் மணலி விடுதியில் தம் ஆசிரியரைப் பின்பற்றிச் செல்லத் துணிந்திருக்கின்றார். இதன் கொடுமை விலங்குகளிடத்தும் காண்பதரிது என்று நாம் முன்னரேயே விளக்கிக் கூறியுள்ளோம். எனினும் சித்தாந்தத்தின் போக்கைப்பற்றி மீண்டும் கூர்ந்து நோக்குதல் ஈண்டு கடனாயின்று.

(5) "இத்தகைய பொய்ப் பிரசாரப் பலனாற்றான் சுயமரியாதைத் தலைவர் பிறந்து வளர்ந்த ஈரோட்டை விட்டு 'தருமமிகு' சென்னையில் தஞ்சம் புகுந்தனர் போலும்! தமிழ் நாடெங்கணும் பேசித் திரிந்தவர் ஒரு மூலையில் உட்கார நேர்ந்தது போலும்!"

என்றனர்:—

'தருமமிகு சென்னை' என்னும் பதங்களை எடுத்தாள இவர் நெஞ்சம் துணிவு கொண்டதே; மங்கட்டி ஒன்று சிதைந்தமை கேட்டு மூர்ச்சையடைவான் ஒருவன் எவனோ அவனே சிவகாருண்யம்பழுத்தான் என்று கூறிய சீவகாருண்யவள்ளல் எச்சிலையும் நுகர அருகராக சித்தாந்த ஆசிரியர் வடலூர் இராமலிங்க சுவாமிகளின் பதப்பிரயோகத்தைக் கொண்டு தம் கட்டுரைக்கு வலிமை கூட்டத் துணிந்தார். வடலூரார் தன் இளம் பிராயத்தே, மாணவர்கட்குக் கல்விபயிற்றிய காலத்து அவர்களைச் சிலகால் அடித்தமைபற்றிப் பிற்காலத்தே அழுதழுது கண்ணீர் உகுத்திருக்கின்றார். சித்தாந்த ஆசிரியர் தனது தடித்தஉடலையும் தடித்த மனதையுங்கொண்டுசிறுபிள்ளைகளை, சோற்றுக்குத் தஞ்சம் என்று அடைக்கலம் புகுந்த பிள்ளைகளை; அபயம் கூறாது கசைகொண்டு தாக்கி 'எம' தண்டனை அளிக்கின்றார். மேற்புல லைக்கடிக்கும் இவரது ஆராய்ச்சியும் மேற்கோளும் இனி தினிதே!

சிறந்த, ஈரோடு என்றபெரும்பட்டினத்தைவிட்டுசுயமரியாதைத் தலைவர் சென்னையெனும் ஓர் மூலையில் ஏன் வந்தார் என்பது கடா. இவர் பூகோள சாத்திரத்தையும் சிறிது பயிலுதல் வேண்டும். இத்தகைய மதியிலார்க்கு மதி கொடுக்கும் பொருட்டே சுயமரியாதைத் தலைவர் தமிழ்நாட்டுத் தலைமைப் பட்டினத்தில் வீற்றிருந்து சுயமரியாதை என்னும் சமரச சன்மார்க்க தனிச் செங்கோல் ஓச்சுகின்றார் வேற்றுமைத் துன்மார்க்க சித்தாந்திகள் நடுக்குறின் நாம் என்செய்வோம்?

மேலும் மந்திரிகளும் மதிக்கும் பெருமைத்து நம் பத்திரிகை என்பதை இவர் ஒப்புக் கொள்கின்றார். நாமும் உவக்கின்றோம்.

(6) "மாமிசத்தை உண்டுமந்திரி வழிபாடு செய்யும் சுயமரியாதை வீரர்கள் மரக்கறிஉண்டு மகாதேவனை வழிபடும் சைவர்கட்கு (?) இரக்கமில்லை என்பது எள்ளி நகையாடுதற்கே உரியது" என்றார்:—

நகையாடி இவரும் ஓர் திரிபுரம் எரிக்கும் விரி சடைக் கடவுளாயின் ஆகுக. ஆனால், மாமிசத்தை உண்டு மந்திரி வழிபாடு செய்வதும் மரக்கறி உண்டு மகாதேவ பூசை செய்வதும்என்பனபற்றி சிறிது நோக்குவாம். புலால் உணவு மேன்மையைப் பற்றியும், மரக்கறி உணவு மேன்மையைப் பற்றியும் நாம் இக்கட்டுரையில் சீர்தூக்கிப் பார்க்கப் போவதில்லை; என்றாலும் இச்'சித்தாந்தம்' பத்திரிகை வெளியிடப்படும் கடிதங்களைக் கண்டு பிடித்தவர்; அதற்குரிய மை, அச்சியந்திரம் முதலியவைகளைக் கண்டு பிடித்தவர்; இவருக்கு பி. ஏ., பி. எல். பட்டமளித்தவர்; அனைவரும் புலால் உண்டவர்களே! மேலும் ஆகாய விமானம், ஆகாயத் தந்தி, ஆகாய ரயில் முதலியனவும்; உலகத்தில் உள்ள பல அரிய விஞ்ஞான உண்மைகள் பலவும் புலால்உண்பவர்களாலேயே கண்டு பிடிக்கப்பெற்று நிற்கின்றன. சுவாமி விவேகானந்தர், ராமகிருஷ்ணர் முதலியவர்களெல்லாம் புலால் புசித்திருக்கின்றனர்; இவர் வணங்கும் மகாதேவன் புசித்த புலால் மலையளவெனப்

(தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

# குடி அரசு

சென்னை 1929 செப்டம்பர் 15உ

## பார்ப்பனப் புதிய தந்திரம்

உஷார்! உஷார்!!

பார்ப்பனர்கள் பொது ஜனங்களை ஏமாற்றி தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக பொது ஜன நன்மைக்கு படுபடுகின்றவர்கள் போல் வேஷம் போட்டு, பொது மக்களுக்குப் பயன்படாத அற்பகாரியங்களை பிரமாதப்படுத்திப் பேசி, அதுவே மகா முக்கியமானதென்று நம்பும்படி செய்து, அது தங்களால்தான் முடியுமே தவிர மற்றவர்களால் முடியாதென்றும், கடவுள் தங்களை அதற்காகவே படைத்திருக்கிறாரென்றும் சொல்லிக்கொண்டு, அந்த "பொதுத் தொண்டு" தொழிலையே தங்கள் ஜீவனத்திற்கும் ஆதிக்கத்திற்கும் உபயோகப்படுத்திக்கொண்டு, நகத்தில் சிறிதுகூட அழுக்குப்படாமல் சௌக்கியமாயிருந்து வாழ்ந்து வருவது யாவரும் அறிந்த விஷயமாகும். மேலும், இம்மாதிரியான ஏமாற்றும் பிழைப்பை யாராவது தெரிந்து அதை வெளிப்படுத்தி ஒழிக்க முயற்சி எடுத்துக்கொண்டால் உடனே நமது பார்ப்பனர்கள் அவர்கள் மீது சற்றும் ஈவு இரக்கமில்லாமல் பாய்ந்து கொடுமையான பழிகளைச் சுமத்தி அவர்களை 'இராட்சதரென்றும்', நாத்திகரென்றும், தேசத் துரோகி என்றும் சொல்லி, பெரும்மக்களிடம் அவர்கள் மீது வெறுப்புண்டாகும்படி செய்து, எப்பாடு பட்டாவது அவர்களது செல்வாக்கை ஒழித்துத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளுவது பரம்பரை வழக்கமாக இருந்து வருவதை சுருதி மூலமாகவும் அனுபவ மூலமாகவும் தினமும் பார்த்துவருகின்றோம்.

உதாரணமாக கடவுளை இன்ன இன்ன மாதிரி இன்ன இன்ன பதார்த்தங்களால் பூஜை செய்தால் இன்ன இன்ன புண்ணியம் என்றும்; ஆனால், அந்தப் பூஜை தாங்கள் மூலியமாகத் தான் செய்து தீரவேண்டும் என்றும்; இன்ன இன்ன குளத்தில், நதியில், குளித்தால் புண்ணியம் என்றும்; ஆனால், இந்தகுளிப்பும் தங்கள் மூலமாக குளித்தால் தான் புண்ணியம் என்றும்; இறந்தவர்களுக்கு என்று இன்ன இன்னது செய்தால், கொடுத்தால், அவர்களுக்கு மோட்சம் கிடைக்குமென்றும்; ஆனால் அவைகள் முழுவதும் தங்களுக்குச் செய்தால், கொடுத்தால், தான் அந்த மோட்சம் கிடைக்கும் என்றும்; கல்யாணம், பிள்ளைப்பேறு, வாழ்வு, நோவு, சாவு ஆகியவைகளுக்கு இன்னஇன்ன சடங்குகள் செய்தால்தான் அவைகள் செல்லுபடியும் பலனும் நன்மையும் உண்டாகும் என்றும்; ஆனால் அவைகள் முழுவதும் தங்களைக் கொண்டு செய்தால்தான் பலிக்குமென்றும் சொல்லி வெகு காலமாக ஏமாற்றிவருவதுடன், இவற்றையும் ஒன்று பத்து நூறு ஆயிரமாக, அதாவது, ஆயிரக்கணக்கான கடவுள்களும் ஆயிரக்கணக்கான தீர்த்தங்களும், பல உலகங்களும், சடங்குகளும், பலன்களும், பதவிகளும் கற்பித்து, அவைகளை அப்படியே நம்பும்படியும் செய்ய, வேதமென்றும், சுருதி என்றும், சாஸ்திரமென்றும், புராணமென்றும், இதிகாசமென்றும் எழுதி, அவைகளை எழுதியவர்கள் ரிஷிகளென்றும், முனிவர்களென்றும், தேவர்களென்றும், கடவுள்களென்றும் சொல்லியும்; அவைகளை அப்படியே நம்பி பின்பற்றி நடந்து அநேகர் முக்தி பெற்றதாகவும் கதைகள் கட்டி, அப்படி முக்தி பெற்றவர்கள் ஆழ்வார்களென்றும், நாயன்மார்களென்றும், சிரஞ்சீவிகளென்றும் சொல்லி, அவற்றிற்கும் கதைகள் எழுதி, இவைகளுக்கு ஆத்மார்த்தம் என்று பெயரும் கொடுத்து, பாமர மக்களை நம்பச் செய்து அதன் பேராலும் தங்களுக்கு வரும்படியும் வாழ்வும் ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருப்பதையும், இவைகளையெல்லாம் இன்றையதினமும் "மகாத்மாக்கள்" உள்பட கோடிக்கணக்கான மக்கள் மூடத்தனமாய் நம்பி அவைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து வருவதோடு அவற்றை பல பார்ப்பனரல்லாதார்களும் பிரசாரம் செய்து வருவதையும் பார்த்து வருகின்றோம்.

ஆத்மார்த்தம், பரலோகசாதனம் என்பவைகளாகிய, அதாவது, நமக்கு பிரத்தியட்சத்தில் தெரியக்கூடாத விஷயங்களில் தான் இந்தப்படி மூடத்தனமாக நாம் ஏமாற்றப்பட்டு வருகின்றோம் என்பது ஒருபக்கமிருந்தாலும், லௌகிகம் என்பதாக, அதாவது, இந்த உலகத்திலேயே நாம் பிரத்தியட்சமாக அனுபவிப்பது என்பதாக சொல்லிக் கொண்டு ஜோசியம், பேய், பிசாசு, மந்திரம், சூனியம், பிராயச்சித்தம், சாந்தி, ஓமம் இன்னும் பல வேறுபட்ட எத்தனையோ விஷயங்களைக் கற்பித்து, மக்களுக்கு பேராசையை யுண்டாக்கி அவைகள் மூலமாகவும் ஏமாற்றி பிழைத்து வருவதையும் பார்த்து வருகின்றோம்.

இவ்வளவும் போதாமல் அரசியல் என்றும், சுயராச்சியம் என்றும், தேசியம் என்றும், ஒத்துழையாமை என்றும் இம்மாதிரி பல அர்த்தமற்ற வார்த்தைகளைச் சொல்லி அவற்றின் மூலமும் தங்களோடு சில பார்ப்பனரல்லாதார்களையும் சேர்த்துக்கொண்டு, பொதுஜனங்களை ஏமாற்றிப் பிழைத்து வருவதையும் நேரில் பார்த்து வருகின்றோம். இவைகள் தவிர, மேற்கொண்டு இதேகூட்டத்தார்கள் தேசசேவை செய்கின்றோமென்பதாகச் சொல்லிக்கொண்டு கதர் என்றும், மதுவிலக்கு என்றும், தீண்டாமை ஒழித்தல் என்றும் ஜனங்களுக்குப் பிடித்தமான சில காரியங்களின் பெயர்களைச் சொல்லிக்கொண்டு; அதன் மூலமும் பாமர மக்களைத் தங்கள் வயப்படுத்திக் கொள்வதன் மூலமும் தங்களுக்கு வேண்டிய காரியங்களை நிலைநிறுத்திக்கொள்ளலாம் என்பதாகக் கருதி புதிய புதிய சூட்சிகள் செய்துகொண்டு வருவதையும் பார்க்கின்றோம். ஆனால், இவ்வளவு புரட்டுகளும், சூட்சிகளும், தந்திரங்களும் சமீபத்தில் நமது நாட்டில் ஏற்பட்ட சுயமரியாதை இயக்கத்தாலும் மற்றும் பல காரணங்களாலும் நமது நாட்டில் ஏற்பட்ட கண் விழிப்பால் ஒருவாறு வெளியாக நேர்ந்து விட்டதால் இனி இதிலிருந்து சமாளிக்க இப்போது புதிதாக ஒரு தந்திரம் கண்டு பிடித்து அதைக் கொண்டு கரையேறப் பார்க்கின்றார்கள். அதுதான் "நிலத்தீர்வை குறைத்தல்" என்னும் ஒரு பெரும் சூழ்ச்சி! இந்தப் புதிய சூட்சியை இவ்விடத்துப் பார்ப்பனர்களோ அல்லது அவர்களுடைய வால்களோ கூலிகளோ கைக்கொண்டால் செல்லுபடியாவது முடியாதகாரியமென தீர்மானித்து, இதற்கு வழக்கம் போல் வடநாட்டிலிருந்து ஒரு ஆசாமியைப் பிடித்துக்கொண்டு வந்து அவர் மூலம் பிரசாரம் செய்விக்கக் கருதி, சுற்றுப்பிரயாணமும் செய்கின்றார்கள். அந்த வடநாட்டு ஆசாமியார் என்றால் அவர்தான் திரு: வல்லபாய் படேல் என்பவர். இவர் திரு: காந்தியின் அந்தரங்கசபை சிஷ்யர்களில் ஒருவர். திரு: காந்தியைப் போலவே இவரும் சுயராஜ்யத்திற்கு ஒவ்வொரு வருஷ வாய்தா போடுபவர். ஆனால், திரு காந்தி ராட்டினத்தில் சுயராஜ்யம் என்றால் இவர் நிலத்தீர்வையில் சுயராஜ்யமென்பவர். ராட்டினத்தில் சுயராஜ்யம் என்பதின் பேதமையை நமது நாட்டில் வெளியாகி இப்போது ராட்டினத்திற்கும் ஜீவ நாடி அடங்கி விட்டதால், இனி ராட்டினப் புரட்டால் யாரையும் ஏமாற்ற முடியாதென்று நமது பார்ப்பனர்கள் கருதி, "ராட்டின வீரரை" விட்டுவிட்டு புதிய தந்திரமாகிய நிலவரியில் சுயராஜ்யம் என்கின்ற புரட்டால் நம்மை ஏமாற்ற இப்போது "நிலத்தீர்வை வீரரை"க் கூட்டி வந்திருக்கின்றார்கள். இந்த நிலத்தீர்வை வீரர் தென்னாட்டில் கால் வைத்தது முதல் ஆரிய தர்மத்தைக் காப்பாற்ற வேண்டிய பிரசாரத்தையும், சுயமரியாதை இயக்கத்தை அழிக்க வேண்டிய பிரசாரத்தையும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைக்குறை கூறும் பிரசாரத்தையும் தான் சென்றவிடமெல்லாம் செய்து வருகின்றார். இதே மாதிரி இவருக்குமுன்னால் வந்த திரு. மாளவியாவும் இதேபோல் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தையும் சுயமரியாதை இயக்கத்தையும் நன்றாய் வைதுவிட்டு, ஜாதி இருக்கவேண்டுமென்றும் சொல்லிவிட்டு, ராமாயணப்பிரசாரம் செய்து ராமருக்கு ஜே போடும்படி சொல்லிவிட்டுப் போனார். அதற்கு முன்வந்த திரு. காந்தியோ கதரின் பேரால் பார்ப்பனரல்லாதாரை வைதுவிட்டு, வருணாச்சிரமப் பிரசாரம் செய்து விட்டு, வருணாச்சிரமத்தைக் காப்பாற்றும் இதை

ய்ய யெல்லோரும் படிக்கவேண்டும் என்றும் சொல்லி விட்டுப் போனார். ஆனால், கடைசியாக வந்த திரு. படேல் முந்திய வர்களை யெல்லாம் விட ஒருபடி தாண்டி சுயமரியாதை இயக்கம் அவமரியாதை இயக்கம் என்றும், பார்ப்பனரல்லாதார் இயக்கம் உத்தியோக வேட்டை இயக்கம் என்றும் சொன்னதோடு, திரு. மாளவியாவைப் போல் ராமாயணப் பிரசாரம் செய்யாமலும், திரு. காந்தியைப் போல் கீதைப் பிரசாரம் செய்யாமலும், இவர் ஒரே அடியாய் ஆரிய தர்மப் பிரசாரமும், திருவாளர்கள் ராஜகோபாலாச்சாரி, சீனிவாசய்யங்கார், சீனிவாசசாஸ்திரி ஆகியவர்களை பெரியார்களென்றும், உத்தமப் பிராமணர்கள் என்றும், பெரிய சீர்திருத்தக்காரர்களென்றும், தியாகிகள் என்றும் சொல்லி பார்ப்பனர்கள் பிரசாரமே செய்துவருகிறார். இந்த கனவான்களைப் பற்றி, தென் இந்தியாவில் ராமநாதபுரத்திலும் வலங்கிமானிலும், சேலத்திலும், பிறந்த இந்த பார்ப்பனர்களின் யோக்கியதையை பம்பாய் மாகாணத்திலிருந்து வேதாரண்யத்திற்கு வந்த ஒருவர், அதுவும் தென்னிந்திய மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதென்றால் சொல்லப் புறப்பட்டவரின் புத்திசாலித்தனத்தை கூட்டிக்கொண்டு வந்தவர்கள்தான் மெச்சிக் கொள்ள வேண்டும். இதற்கு எதை ஒப்பிடலாமென்றால், தன் தகப்பன் வீட்டுப் பெருமையைப் பற்றி அண்ணனுக்கு தங்கை எடுத்துச் சொல்ல வருவது எவ்வளவு புத்திசாலித்தனமுடையதோ, அதுபோலவே சாஸ்திரிகளைப், அய்யங்கார்களையும், ஆச்சாரியார்களையும் பற்றி திரு. படேல் சொல்வது என்று கூற வேண்டியிருக்கிறது. இதிலும் மற்றொரு விசேஷமென்னவென்றால், திரு. பட்டேல் "சுயமரியாதையை விட நிலவரி முக்கியமானது" என்று சொல்லுவதேயாகும். எனவே, இது எவ்வளவு பைத்தியக்காரத்தனமான வாசகம் என்பதை வாசகர்கள் தான் முடிவுசெய்து கொள்ளவேண்டும். இந்த மாகாணத்தில் ஆயிரக் கணக்கான பதினாயிரக் கணக்கான ஏக்கர் பூமிகள் வைத்துக் கொண்டு, பதினாயிரக்கணக்காக லட்சக்கணக்காக ரூபாய்கள் நிலவரி கொடுத்துக்கொண்டிருக்கின்றவர்களை விட திரு. படேல் நிலவரியைப்பற்றின கஷ்டம் அதிகம் அனுபவிப்பவர் போல் கண்ணீர் விடுகின்றார். ஆனால் அவர் அந்தப்படி எதற்காக கண்ணீர் விடுகின்றார் என்றால், ஒரு வருஷத்திற்கு சுயமரியாதை இயக்கத்தை மூட்டை கட்டி ஒரு வீட்டில் போட்டு பூட்டி வைத்துவிட வேண்டுமாம். அப்படிச் செய்தால் ஒரு வருஷத்தில் நிலவரி குறைந்துவிடுமாம். பிறகு இதுவே சுயராச்சியமாய்விடுமாம்! என்னே திரு. பட்டேலின் புத்திசாலித்தனம்! சாதாரணமாய் நமது நாட்டில் பார்ப்பனர்களுக்கும் வரிகளில் பத்தில் ஒருபங்குகூட இருக்காது நமது நிலவரிக் கொடுமை என்று கோபுரத்தின் மீதிருந்து கூவுவோம். அன்றியும் இந்தப்பார்ப்பனப் புரட்டிலும் பார்ப்பனக் கொடுமையிலும் பதினாயிரத்தில் ஒரு பங்குகூட இருக்காது இந்த அரசாங்கப் புரட்டும் கொடுமையும் என்று ஆங்காங்கு எழுதி வெற்றி ஸ்தம்பம் நட்டுவைக்க நம்மால் முடியும் என்றும் உறுதி கூறுவோம். மேலும் இந்தப்பார்ப்பனர்களால் நமக்கு தினமும் ஏற்படும் சுயமரியாதைக் குறைவுகளில் லட்சத்திலொருபங்குகூட வெள்ளைக்காரர்களால நமக்கு சுயமரியாதைக்குறைவு இல்லையென்று தூக்குமேடையிலிருந்து கொண்டும் சொல்லுவோம். வெள்ளைக்கார அரசாட்சியால் வரிப்பளுவும், புரட்டும், கொடுமையும், மரியாதைக் குறைவும் உண்டென்பதை நாம் மறுக்கவில்லையானாலும், இவைகளுக்கும் காரணம் இந்தப் பார்ப்பனர்களின் சுயநலமும் தேசத்துரோகமும் என்றுதான் சொல்லுவோம். என்றாலும் இவைகள் பார்ப்பனர்களால் ஏற்படும் வரிப்பளுவு, புரட்டு, கொடுமை, மரியாதைக் குறைவு, இழிவு ஆகிய இவைகளுக்கு உரைபோடக்கூட கட்டாது என்று சொல்லுவோம். எப்படியானாலும் ஒரு மனிதன் அரசாங்கத்திற்கு வரிகொடுத்தேயாகவேண்டும். ஆனால், ஒருசமயம் அரசாங்கம் வசூல்செய்யும்வரி அதிகமென்று சொல்லலாம். ஆனால், அந்த அதிக வரி எப்படி, யாரால், உயர்ந்தது என்பதைக் கவனித்தால் இதே பார்ப்பனர்கள் தங்களுக்கு மீ 1க்கு 5,500 ரூபாய் சம்பளம் வேண்டும் என்று கேட்டதினால்தான், சர்க்கார் குடியானவர்கள் தலையில் கையைவைத்து நிலவரி முதலியவைகளை உயர்த்தி வசூல் செய்து பார்ப்பனர்களுக்கு அழுது வந்தார்கள். ஆனால், இப்போது அந்தப்பணம் முழுவதும் பார்ப்பனர்கள் கைக்குப் போகாமல் இருக்கும்படியான மார்க்கத்தை பார்ப்பனரல்லாதார் இயக்கம் செய்யப் புறப்பட்டவுடனே, பார்ப்பனர்களுக்கு "நில வரிப் பளுவு" அதிகமாய்ப்போய்விட்டதுடன் பார்ப்பனரல்லாதார் இயக்கம் உத்தியோக வேட்டை இயக்கமாகவும் போய்விட்டது. திருவாளர்கள் வி. கிருஷ்ணசாமி அய்யரும், சிவசாமி அய்யரும், ராஜகோபாலாச்சாரியும், சி. பி. ராமசாமி அய்யரும், வெங்கட்டராமசாஸ்திரியும், பி.என். சர்மாவும் மாதம் 5,500, 6,500 ரூபாய்கள் வீதமும்; பாஷ்யம் அய்யங்காரும், மணி அய்யரும், சதாசிவ அய்யரும், சுந்தரமய்யரும், குமாரசாமி சாஸ்திரியாரும் ஆகிய அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, சர்மாக் கூட்டங்கள் மாதம் 1-க்கு 4,000, 5,000 ரூபாய்கள் வீதமும் வாங்கிக்கொண்டிருந்தபோது இந்த "நிலவரி பளுவு" எங்கு போயிருந்தது என்று கேட்கின்றோம். அன்றியும் திரு. காந்தியை அராஜகர் என்றும், அவரை ஜெயிலில் பிடிக்காவிட்டால் இந்தியா முழுகிப்போய்விடும் என்றும் சொல்லி ஜெயிலில் அடைக்க உதவிசெய்து மகாகனம் பட்டம் வாங்கிய திரு. சீனிவாச சாஸ்திரி இந்த படேல் கண்களுக்கு உத்தமப் பிராமணராயும் தியாக புருஷராயும் காணப்படுகின்றார்! அன்றியும் திரு. காந்திக்கு மூளை இல்லை என்றும், ஒத்துழையாமை சட்ட விரோதம் என்றும், திரு. ஜவஹரிலால் முட்டாள் அதிகப்பிரசங்கி என்றும் சொன்ன திரு. சீனிவாசய்யங்கார் இந்த திரு. படேல் கண்களுக்கு உத்தமப் பிராமணராகவும் தியாக புருஷராகவும் காணப்படுகின்றார்! கடைசியாக மக்கள் பிறவியில் உயர்வுதாழ்வு இல்லை என்று ஒரு தீர்மானம் மாகாண காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேறிய உடன் தனது மெம்பர் ஸ்தானத்தை ராஜிநாமா கொடுத்ததோடு திருவாளர்கள் சந்தானம், வரதாச்சாரி, டாக்டர் ராஜன் ஆகியவர்களையும் கமிட்டியில் இருந்து ராஜிநாமா செய்யச் செய்ததுடன் இது சரியா என்று திரு. காந்தி கேட்டதற்கு, அது என் சொந்த அபிப்பிராயம் என்று சொன்னவரும் மற்றும் பார்ப்பனரல்லாதாருக்கு ................எவ்வளவோ மோசமாய் நடந்துகொண்டவருமான திரு. இராஜகோபாலாச்சாரியார் திரு. படேல் கண்ணுக்கு உத்தமோத்தம பிராமணராயும், பெரிய தியாகியாயும், பிராமணரல்லாதாருக்கே உழைக்கப் பிறந்தவராயும் காணப்படுகின்றார் என்றால்; நமது திரு. பட்டேலின் கண்கள் எவ்வளவுபரிசுத்தமானவை என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்று நாம் கேட்கின்றோம். நிற்க, இப்போது எப்படியாவது நமக்கு ஒரு அரசு இருந்துதான் ஆகவேண்டும், அவனுக்கு நாம் வரி கொடுத்துதான் ஆக வேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபமிருக்காது. ஆனால், பார்ப்பனீயம் இப்போது நமக்கு அவசியமா? அதற்கு நாம் வரி கொடுக்கவேண்டியது அவசியமா என்று திரு. படேலைக் கேட்கின்றோம். அன்றியும் ஆரிய தர்மத்திலுள்ள ஏதாவது ஒரு புரட்டுக்கும், மநுதர்மத்திலுள்ள ஏதாவது ஒரு புரட்டுக்கும் சமானமாக அரசாங்கப் புரட்டில் எதையாவது சொல்ல முடியுமாவென்றும் திரு. படேலைக் கேட்கின்றோம். மேலும், பார்ப்பான் தன்னை பூதேவன் என்றும், நம்மை அவனது அடிமை, தாசிமகன், சூத்திரன் என்றும் சொல்லுவதுபோல் எங்காவது அரசாங்கத்தார்கள் சொல்லுகின்றார்களா? அல்லது எழுதி வைத்திருக்கின்றார்களா? என்று திரு. படேலைக் கேட்கின்றோம். தவிர, பார்ப்பனர்கள் நமக்கு யாதொரு உபகாரமும் செய்யாமல் நம்மை இழிவும்படுத்தி தங்கள் காலிலும் நம்மைபெண்டு பிள்ளைகளுடன் விழச்செய்து நம்மிடம் கொள்ளையும் அடித்து அதனால் நமக்கு யாதொரு பிரயோசனமுஞ்செய்யாமல் இழிவுபடுத்திக்கொண்டு இருப்பது போல் அரசாங்கம் நம்மிடம் வரி வசூலிப்பதில் அவ்வளவு கொடுமையாயும் வசூலித்த பணம் அவ்வளவையும் சுயநலமாயும் உபயோகித்துக் கொள்ளுகின்றார்களா என்றும் கேட்கின்றோம். ஆகவே முதலில் நாம் எந்தவரிப் பளுவைக் குறைக்கவேண்டும் என்றும், எந்தப் புரட்டை ஒழிக்கவேண்டும் என்றும், எந்த அவமரியாதையில் இருந்து மீள வேண்டும் என்றும் திரு. படேலைக் கேட்கின்றோம்.

கடைசியாக நமக்கு சுயமரியாதை பெரிதே ஒழிய மோட்சராச்சியம், சுயராச்சியம் ஆகியவைகள் பெரிதல்லவென்றும்; பார்ப்பனப் புரட்டும்,

பார்ப்பனக் கொடுமையும், பார்ப்பன வரியும் ஒழிய வேண்டியதைவிட அரசாங்கப் புரட்டும், அரசாங்க கொடுமையும், அரசாங்க வரியும்ஒழியவேண்டியது அவ்வளவு அவசரமல்லவென்றும் திரு;பட்டேலுக்குவெளிப்படையாயும், தைரியமாயும் சொல்லுவதோடு, எந்தக் காரணத்தை முன்னிட்டாவது நிலவரிப் புரட்டை தமிழ் நாட்டிற்குள் கால்வைக்கஇடம் கொடுத்துவிடக்கூடாது என்று பார்ப்பனரல்லாத மக்களுக்கு எச்சரிக்கையும் செய்கிறோம். பார்ப்பனீயத்தை ஒழித்து பார்ப்பனக் கொடுமையில் இருந்து மீண்டு சுயமரியாதை பெறுவதற்கு நாம் உயிர், பொருள், ஆவி, தேசம், "தேசியம்", "சுயராச்சியம்", "நிலத்தீர்வை" ஆகிய எதையும் கொடுக்கத் தயாராயிருக்கின்றோம். உதாரணமாக இதே அரசாங்கம் நம்மிடம் வந்து 'இனியும் அதிகமாக வக்ராவும், பத்துரூபாய் அதிக வரி கொடுக்கின்றாயா அல்லது பார்ப்பான் காலில் விழுவதைப்பற்றி கவலைப்படாமல் இருக்கின்றாயா" என்று கேட்டால், அதிக வரியாவது கொடுப்போமே ஒழிய இனி பார்ப்பான் காலில் விழுவதை பொறுத்துக் கொண்டிருக்க மாட்டோம் என்றுதான் சொல்லுவோம். இதனால்நம்மை யார் என்ன சொன்னாலும் நாம் பயப்பட மாட்டோம் எனில், இதற்குப் பெயர் தான் சுயமரியாதையேஒழிய, பிச்சைக்காரப் பார்ப்பான் காலில் விழுந்து கும்பிட்டு அவனுடைய அழுக்குப் பிடித்த காலைக் கழுவிய தண்ணீரைத் தலையில் தெளித்துக் குடித்து மோட்சத்திற்கு போவதோ, சுயராச்சியம் பெறுவதோ, நிலவரி குறைவுபடுவதோ சுயமரியாதை அல்லவென்று மறுமுறையும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகின்றோம். ஏனென்றால், உண்மையான சுயமரியாதையை அடைந்தோமானால் சுயராச்சியமும் நிலவரிக் குறைவும்தானாக ஏற்பட்டுவிடும் என்கின்ற உறுதி நமக்கு இருக்கின்றது. எனவே திரு. படேல் அவர்கள் நிலவரி குறைவதற்காக சுயமரியாதை இயக்கத்தை கட்டிவைக்கும்படி சொல்லுவது புருஷனை பலி கொடுத்தால் பிள்ளைவரம் கிடைக்கும் என்கின்ற பழமொழிபோல் இருக்கின்றது. ஆகையால் இந்த நிலவரிப்புரட்டுக்கு யாரும் ஏமாந்துவிடக்கூடாது என்றும், இது நமது நாட்டுப் பார்ப்பனர்களுக்குப்போகமுடியாமைக்கும்விசனிக்கின்றோம் ...

## ஈரோட்டில் ஜனாப் தாவுத்ஷா

தாருல் இஸ்லாம் பத்திராதிபர் ஜனாப் தாவுத்ஷா சாயபு அவர்கள் தாராபுரத்திலிருந்துவரும் வழியில் ஈரோட்டில் தங்கியபோது, ஒரு சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமென்று பல இந்து முஸ்லீம் நண்பர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கி 9-9-29ந் தேதி மாலையில் திரு. ஈ. வெ ராமசாமி அக்கிராசனத்தில் இஸ்லாமும்-சுயமரியாதையும் என்பது பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். அதில்முக்கியமாக இஸ்லாம் மார்க்கம் சுயமரியாதையையே அடிப்படையாகக் கொண்டதென்றும் உதாரணமாக இப்போது தோன்றியிருக்கும் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கைகள் எல்லாம்இஸ்லாம் மார்க்கத்தில் இருக்கின்றதென்றும், அல்லாசாமி பண்டிகை, பஞ்சா வணக்கம், சந்தனக்குடம், நாகூர் கோவில் நடவடிக்கை ஆகியவைகள் சிறிதும் இஸ்லாம் மார்க்கத்திற்குசம்பந்தப்பட்டவையல்லவென்றும், இவைகள் எல்லாம் முல்லாக்கள் என்னும் ஒரு புரோகிதக் கூட்டத்தார் தங்களின் வயிற்றுப் பிழைப்புக்காக செய்த தந்திரங்கள் என்றும், இவைகளை முஸ்லீம்கள் அடியோடு ஒழிக்கவேண்டும் என்றும், உலகத்தில் மற்ற மதங்கள் போய்க் கொண்டிருக்கும் வேகத்தில் இஸ்லாம் மதத்தில் உள்ள புரோகித சூட்சிகளை சீக்கிரத்தில் ஒழிக்காவிட்டால் இஸ்லாத்தின் பெருமைக்குமாசு ஏற்பட்டு விடுமென்றும், இஸ்லாமே சிறந்தமதமென்றும், குர்ஆனின்பெருமையை உலகம் அறியாமலிருப்பதற்கு அது பல பாஷைகளில்மொழி பெயர்க்கப்படாததே காரணம் என்றும், குர்ஆனைதமிழில் மொழிபெயர்த்து எல்லோருக்கும் வழங்கவேண்டுமென்றும், குர்ஆனிலிருந்து அனேக மேற்கோள்கள் எடுத்துக் காட்டி இஸ்லாத்தில் உள்ள பொறுமையும், சமாதானமும், சாந்தியும் வேறு எங்கும் இல்லை என்றும் மெய்ப்பித்துக் காட்டினர்.

### 'நாத்திகர்களின்' கோடுமை

பிறகு அக்கிராசனர் முடிவுரையில் ஜனாப் தாவுத்ஷா மார்க்கத்திற்காக பெரிய தியாகம் செய்தவர் என்றும், அவர் தாராள நோக்கம் கொண்டவர் என்றும், முல்லாக்களின் சூட்சிஅவருக்கு பிடிக்காதென்றும், இஸ்லாம் மார்க்கத்தில்ஏற்பட்டகளைகளை களைத்தெறிய அவர் தைரியமாய் உழைத்து வருகின்றார் என்றும், அதனால் பலர் அவரை நாத்திகர் என்று சொல்லுகின்றார்கள் என்றும், நாத்திகர்கள் என்ற பட்டம் வாங்குபவர்களைக் கண்டால் தனக்கு வெகு பிரியம் என்றும், ஏனெனில் நாத்திகப்பட்டம் பெற்றவன்தான் உண்மை சீர்திருத்தவாதி ஆகக்கூடும் என்றும், நாத்திகப் பட்டம் பெறுவதற்கு பயப்படுபவனால் ஒரு சீர்திருத்தமும் செய்ய முடியாதென்றும் திரு. தாவுத்ஷா நாத்திகர் என்று சொல்லப்பட்டாலும் இஸ்லாத்தைப் பற்றி யார் எவ்வித குறை சொன்னாலும் அவர் சமாதானமும் மறுப்பும் சொல்லி வெற்றிபெற்று வந்திருக்கின்றார் என்றும், அவரைப்போல் இஸ்லாம் மார்க்கத்திற்கு உழைப்பவர்கள் அரிதரிதுஎன்றும், அவர் சொன்னதை ஒவ்வொரு முஸ்லீமும் பின்பற்ற வேண்டும் என்றும் கூறினர்.

------------------------------------------------------------------------

டைய ஒரு புதிய சூட்சி என்றும் சொல்லி மறுபடியும் உஷார்ப் படுத்துகின்றோம்.

## உண்மை நாடுவோர் சங்கம்

7-9-29ந் தேதி மாலை ஈரோடு திரு ஈ வெ ராமசாமி அவர்கள் மாடியல் உண்மை நாடுவோர் சங்க வாரக் கூட்டம் கூடியது.

திருவாளர்கள்மாரிப்பயன் செல்வி லக்ஷிமி அம்மாள், ஈ. வெ. ராமசாமி இவர்கள் மூடப்பழக்கம் என்பது பற்றி பேசினார்கள்.

## பெண்கள் முன்னேற்றம்

பெண்கள் முன்னேற்றக் கூட்டங்கள் ஒவ்வொரு வீதியிலும் போடவேண்டும் என்பதாக உண்மை நாடுவோர் சங்கத்தில் கேட்டுக்கொண்டபடிக்கு முதல் முதலாக 10-9-29ந் தேதி மாலை 7-மணிக்கு மேற்கு மகமதிய தெருவில் திரு, பங்காரம்மாள் அவர்கள் வீட்டில் ஒரு பெண்கள் கூட்டம் கூடியது. சுமார் 30,40 பேர்கள் பெண்கள், குழந்தைகள், ஆண்கள் வந்திருந்தார்கள். அக்கூட்டத்திற்கு செல்வி இரங்கம்மாள் அக்கிராசனம் வகித்தார். செல்விபங்காரம்மாள் கூட்டத்திற்கு வந்தவர்களை வரவேற்று ஒரு சிறிய சாற்பொழிவு நிழ்த்தினர். பிறகு திரு. ஈ. வெ. ராமசாமி, திரு. ப. வெங்கிடாசலம் ஆகியவர்கள் 'பெண்களும் சுயமரியாதை இயக்கமும்' என்பது பற்றி பேசினார்கள்.

பிறகு செல்வி பங்காரம்மாள் கணவரால் வந்தனோபசாரம்சொல்லி தலைவி செல்வி ரங்கம்மாளால் முடிவுரை சொல்லி கூட்டம் கலைந்தது.

மற்றும் இது போலவே ஒவ்வொரு வீதியிலும் பெண்கள் கூட்டம் கூட்டுவதாக ஒப்புக் கொண்டுபோனார்கள்.

## சுயமரியதைத் திருமணங்கள்

சமீப காலத்தில் எங்கும் சுயமரியாதைத் திருமணங்கள் நூற்றுக்கணக்காய் நடந்ததாக செய்திகள் வந்து கொண்டிருப்பதைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அவைகளைப் பூரணமாய்ப்பிரசுரிக்கமுடியாமைக்கும் வருந்துவதுடன் அனேகதிருமணங்களுக்குப்போகமுடியாமைக்கும்விசனிக்கின்றோம் ஒவ்வொருதிருமணத்திற்கும் நம்மை அழைத்ததற்கு நாம் நன்றி சொலுத்தக் கடமைப்பட்டிருந்தாலும் அவ்வளவுக்கும் நம்மால் போகக்கூடியது சாத்தியமின்மையால், வராமைக்கு மன்னிக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகின்றோம். இவ்வியக்கம் தோன்றிய இவ்வளவு சீக்கிரத்தில் பார்ப்பனர்களை நீக்கிய திருமணங்களும், மூடச்சடங்கை நீக்கிய செய்கைகளும் சந்தோஷ மடையத்தக்க அளவு நடந்து வந்தாலும், விதவாவிவாகம், கலப்பு மணம் முதலியவைகள் நாம் எதிர் பார்த்த அளவுக்கு 100க்கு 1-பங்கு கூட நடத்தப்பட்டதாய்சொல்வதற்கில்லை. ஆதலால், நமது நண்பர்கள் ஆங்காங்குமுயற்சித்து விதவைகளுக்கு மணம் செய்விக்கமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டிக்கொள்ளுகின்றோம். மணமக்களுக்கு உத்தியோகங்கள் சம்பாதித்துக்கொடுக்கக் கூட பல நண்பர்கள் முன்வந்திருக்கின்றார்கள். சுயமரியாதைத் தொண்டர்கள் இந்தாண்டில் சற்றுகவலை செலுத்த விரும்புகின்றோம்.

## கோயமுத்தூர்

11-9-29 மாலை 5-மணிக்கு கோயமுத்தூர் ஜில்லா போர்டு ஆபீசு கட்டிடத்தில் மது விலக்கு பிரசார ஜில்லா கமிட்டியின் முதற் கூட்டம் கூடிற்று. 9 கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள் கமிட்டிக்கு திரு சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் தலைவராகவும் திரு. ஈ. வெ.கிருஷ்ணசாமிநாயக்கர் உபதலைவராகவும் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். சீக்கிரத்தில் பிரசாரவேலை துவக்கப் படும்.


"பாபுலர் எலெக்டிரிக் கைவிளக்கு"

(எந்த சமயத்திலும், சைகிளுக்கும் உபயோகிக்கக் கூடியது)



உயர்ந்த பவருள்ள பாட்டெரியுடனும், அழுத்தமான பூதக் கண்ணாடியுடனும் உயர்ந்த மாதிரியிலுள்ளது. வெகு தூரத்திற்குப் பிரகாசத்தைக் கொடுப்பதாயும், வெகு நாளுழைக்கக் கூடியதாயும், பளிச்சென்ற பிரகாசமும் கொடுப்பதாயுமுள்ளது. கையிலெடுத்துப் போக மிக சௌகரியம். நீங்களும் ஒன்று வைத்துக் கொள்ளுங்கள்.

விலை ரூ. 3—0—0 தான்.
வி. பி. தனி.

லக்ஷிமி ட்ரேட்ஸ் கம்பெனி.

தங்கசாலை, மதராஸ்.

(9-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

புராணங்கள் கூறுகின்றன. எனவே புலால் உண்பது இழுக்கென்பது இவர் வாய்ப்பிறப்பில் அறிவுறுத்தும் தாத்தன்று. பன்றி ஓர் மரக்கறி, மரக்கறியிலும் உயர்ந்ததென்னக் கருதப்பெற்ற கந்த மூலங்கள் உண்டு உயிர் வாழ்வது. மரக்கறி உண்ணுவதால், புலாலையே புசிக்கும் சிங்கம் புலி முதலிய அழகிய, வீரம்வாய்ந்த, பெருந்தன்மை உள்ள விலங்கினங்களைப் பார்க்கிலும் பன்றி உயர்வு படுவதின்றே! இப்புலால் புசிக்காத திருவிலாச் சுப்ரஹ்மண்யம் இம்மெய்ம்மையை உன்றிச் சிந்திப்பாராக. பன்றியும் திருவிலாச் சுப்ரஹ்மண்யம் போன்ற ஓர் சித்தாந்த சைவப் பெரியார் போலும்! இவரை நாம் உண்மைச் சைவர் என்றே ஒப்புக் கொள்ளவில்லை.

மேலும் இம்மாமிச பிண்டம் மாமிசத்தை உண்ணமல் மாமிசமே உணவாய விலங்குகளினும்கொடுமையைச் செய்யத் துணியுமேல், புலால் உண்ணுமைக்குச் சிறப்பு உளதேல், அச்சிறப்பு இவர் ஓம்புதலினாலேயே, இவர் மட்டில் சிர்குலைகின்றது என்பது திண்ணம். மகாதேவனை வழிபட்டு நாம் இக்கட்டுரையில் விளக்கிய அளவில் இவர் அறிவிழந்து, ஆராய்ச்சி இழந்து, உண்மை இழந்து, பொறுமை இழந்து நிற்பாராயின், மகாதேவ வழிபாட்டினும் மந்திரி (மதியின் மிக்கார்) வழிபாடு பன்மடங்கு சிறப்புடையதன்றே!

மகாதேவனை வழிபட்டு வழிபட்டு சூன்ய நிலை யடைந்தாராயின், இனி அறிவுடைமையில் உயர்வு பொருந்திய குடியரசு, திராவிடனின் வளர்ச்சியில் அழுக்காறு கொண்டு குடிவெறியில் புலம்புவதுபோல் ஓலமிடுவது சித்தாந்தத்தின் சீரியசெயல் போலும்!

நிற்க. இவர் சுயமரியாதை இயக்கம் முக்காற்பங்கு ஒடுங்கி விட்டது என்று கூறுகின்றார்; எஞ்சிய காற்பங்கையும் ஆகைக்கச் சுக்கணம் புனைய சுற்றம் சேர்க்கின்றார். இச்சுயமரியாதை இயக்கம் சூரியமண்டலத்தை மட்டும் எட்டவில்லை; இவரது, இச்சித்தாந்தப் பேராசிரியரது மதி மண்டலத்தையும் (அறிவு மண்டலம்) எட்டி, அங்கு கேவல இருளே காணப்படுவதால், அம்மண்டலத்தையும் துளைத்துச் சென்று அங்கும் அறிவுச்சுடர் கொளுத்துகின்றது! கொளுத்துகின்றது!! கொளுத்துகின்றது!!! அக்கொளுத்துதலில் இவர் அறியாமையும், போலிச்சைவமும், 'பிரப்பம் பழம்' பூசையால் இவர் ஆற்றும் மகாலிங்க வழிபாடும், கடிதில் அழியும்! அழியும்!! அழியும்!!

இவர் கட்டுரையின பொருந்தாக் கூற்றை, அறிவிலாக் கூற்றை நாம் மேற்கொண்டும் விளக்க விரிவஞ்சி விடுக்கின்றோம்.

---

வியாபாரத்திற்கழகு — — விளம்பரம் செய்தல்

## சுயமரியாதைத் திருமணங்கள்

---

கும்பகோணம்:—இவ்வூர் கும்பேஸ்வரர் தெற்கு வீதியில் 5 9-29 பகல் 11 மணிக்கு திரு. விநாயக மூர்த்தி அவர்கட்கும், திரு. முருகாயி அம்மைக்கும், திரு: ஆர். சி. வெங்கடராம் அவர்களால் சுத்த சுயமரியாதை முறையில் திருமணம் நடத்திவைக்கப்பட்டு, குடியரசுக்கு 1-ரூபாயும், திராவிடனுக்கு 1 ரூபாயும் நன்கொடை யளிக்கப்பட்டது.

* * *

ஈரோடு:—கவுண்டம் பாளையத்தில் திரு. பழனியப்ப கவுண்டருக்கும், திருமதி லக்ஷ்மிபாயி அம்மாளுக்கும் 5-9-29ல் பார்ப்பனப் புரோகிதமின்றி குடும்ப அருமைக்காரராலும், ஈரோடு, திரு: எம் சிக்கையா அவர்கட்கும், திருமதி கே. கிருஷ்ணம்மாளுக்கும், திரு. வி. வாசுதேவன் அவர்கட்கும், திருமதி முத்தம்மாளுக்கும், திரு வி. எம் செம்பையன் அவர்கட்கும், திருமதி கே. நாகம்ம ளுக்கும்; திரு: வெங்கிடசாமி அவர்கட்கும், திருமதி காகம்மாளுக்கும்; திரு: கே. வீ. ரங்கசாமியவர்கட்கும், திருமதி வி. எம். ஜானகியம்மாளவர்களுக்கும்; திரு: சுப்பையா அவர்கட்கும், திருமதி சிரங்கம்மாள் அவர்கட்கும், திரு: முத்து அவர்கட்கும்; திருமதி முத்தம்மாள் அவர்கட்கும், திரு: ஆர். கிருஷ்ண சாமியவர்கட்கும் 6ந் தேதியிலிருந்து 9ந்தேதிகளுக்குள் எவ்விதமான சடங்குகளுமின்றி சுயமரியாதைத் திருமணங்கள் நிறைவேறின.

* * *

திருப்பத்தூர்:—திரு: பாலசுப்ரமணியம் அவர்கட்கும், திருமதி சிங்காரவடிவேல் அம்மாளுக்கும்; திரு. ஷண்முகம் அவர்கட்கும், திருமதி செல்லம்மாளுக்கும் ஆவணி மாதம் 22ந் தேதி சுயமரியாதை முறையில் இனிதே திருமணங்கள் நிறைவேறின.

* * *

தேன்மாப்பட்டி:—திரு: கருப்பையா அவர்கட்கும், திரு: விசாலாட்சி அம்மையாருக்கும், ஆவணி 22ந் தேதி பகல் 11 மணிக்கு சுத்த சுயமரியாதை முறையில் திருமணம் நடந்தேறியது.

* * *

திருநெல்வேலி:—திரு: எம் மருத விநாயகம் அவர்கட்கும், திருமதி சித்திர வடிவம்மாளுக்கும் 1-9-29 காலை 7 மணிக்கு சுயமரியாதைத் திருமணம் நடந்தேறியது.

* * *

சூலூர்:—திராவிட வாலிப சங்கத்தின் ஆதரவில் 6-9-29ந் தேதி சுத்த சுயமரியாதை முறைப்படி செல்வி உண்ணுமலையம்மாளுக்கும், திரு: மஞ்சப்ப தேவருக்கும்; செல்வி அங்கம்மாளுக்கும், திரு: ஆறுமுகத் தேவருக்கும்; செல்வி லட்சுமியம்மாளுக்கும், திரு: கருப்பண்ணத் தேவருக்கும்; செல்விநாகம்மாளுக்கும்திரு: கருப்பண்ண நாடாருக்கும்; செல்வி பேச்சியம்மாளுக்கும், திரு: மூத்தண்ணனுக்கும்; செல்விரங்கம்மாளுக்கும், திரு. காளிநாயக்கருக்கும், செல்வி குட்டியம்மாளுக்கும், திரு: கருப்பநாயக்கருக்கும், செல்விரங்கம்மாளுக்கும், திரு: ராமநாயக்கருக்கும் திருமணங்கள் அதிவிமரிசையாக நடைபெற்றது.

* * *

அக்கிராப்பட்டி:—திரு. ராமசாமி செட்டியாருக்கும், திருமதி லட்சுமியம்மாளுக்கும், திரு. செல்லஞ் செட்டியாருக்கும், திருமதி முத்தம்மாளுக்கும் சென்ற வாரம் திருமணங்கள் சுயமரியாதை முறையில் இனிது நடைபெற்றது.

* * *

மதுரை:—திரு. திரவிய சுப்ரமணியம் அவர்கட்கும், திருமதி வேலம்மாளுக்கும் ஆவணித்திங்கள் 21-ம் நாள் மதியம் 1-மணிக்கு சுயமரியாதை முறையில் திருமணம் நடந்தேறியது.

* * *

தொட்டப்பட்டி:—திரு. ராமசாமி நாயுடுவுக்கும், திருமதி லட்சுமியம்மாளுக்கும், 6-9-29ல் சுயமரியாதை முறையில் திருமணம் நடந்தேறியது.

* * *

திண்டுக்கல்:—திரு. பிச்சை ஆச்சாரிக்கும், திருமதி சீதாலட்சுமியம்மாளுக்கும் 6-9-29-ல் சுயமரியாதை முறையில் திருமணம் நடந்தேறியது.

* * *

ஆண்டார்முள்ளிப்பள்ளம்:—திரு. அய்யாசாமிக்கும், திருமதி கிருஷ்ணம்மாளுக்கும் ஆவணித் திங்கள் 22-ம் நாள் சுயமரியாதை முறையில் இனிது திருமணம் நிறைவேறியது.

* * *

விருதுநகர்:—திரு. சோமசுந்தரத்திற்கும், திருமதி அமிர்தம்மாளுக்கும் 13-8 29-ல் ஏற்பாடுகள் செய்தும் சுயமரியாதை முறையிலேயே திருமணம் இனிது நிறைவேறியது.

* * *

ஆத்தூர்:— செல்லையை யடுத்த ஆத்தூரில் 6-9-29ந் தேதி திரு: எஸ். சுடலைமுத்து அவர்களுக்கும், செல்வி சொர்ணத்தம்மாளுக்கும்மணமகனில்லத்தில் சுத்த சுயமரியாதை முறைப்படி சில பெரியோர்களால் நடத்துவிக்கப்பட்டது. இம்மணத்தை முன்னிட்டு "குடியர"சிற்கு நன்கொடையாக அனுப்பிய ரூபாய் ஒன்றை அன்புடன் ஏற்கிறோம். (ப-ர்)

* * *

திருநெல்வேலி:—திரு மருதநாயகம் அவர்களது திருமணம் பற்றி நமது குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பெற்றுள்ளது. [வரவேற்கின்றோம். ப-ர்]

* * *

வெளிப்பாளையம்:—திரு. பக்கிரியா பிள்ளை மகனார் திரு. இராமநாதனுக்கு நடைபெற்ற திருமணம் பற்றி நமது குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடை யளிக்கப்பட்டுள்ளது. [வரவேற்கின்றோம். ப-ர்]

* * *

சிலாமா(மலேயா நாடு)8-9-29ல் (1) திரு. பக்கிரிசாமிக்கும் செல்வி உண்ணுமலையம்மாளுக்கும், (2) திரு. ராஜகோபாலுக்கும் செல்வி உருக்குமணி யம்மாளுக்கும் சுயமரியாதைத் திருமணங்கள் சீரும்சிறப்புமிக நடைபெற்றன.

* * *

தொட்டம்பட்டி:— பல்லடம் தாலுக்கா, தொட்டம்பட்டி கிராமத்தில் திரு ராமசாமிக்கும் லட்சுமியம்மாளுக்கும், அதுகாலை வந்திருந்த பார்ப்பனர்களை வெளியேற்றிச் சுயமரியாதைத் திருமணம் நிகழ்த்தப் பெற்றதாய் அறிவிக்கப்படுகின்றது. இதுவேஇக்கிராமத்தில் பார்ப்பனீய மொழிந்த முதற்திருமணமாகும்.

* * *

ஆண்டார் முள்ளிப்பள்ளம்:-கடலூர், ஆலப்பாக்கத்தைச் சார்ந்த ஆண்டார் முள்ளிப்பள்ளம் என்னும் கிராமத்தில், அவ்வூர் கணக்காயர் திரு. அய்யாசாமிக்கும் செல்வி கிருஷ்ணம்மாளுக்கும் 6-9-29-ல் சுயமரியாதை நெறியில் திருமணங்கண்டனர். அதுகாலை சுயமரியாதை நெறியே உண்மைநெறியென சொன்மாரி பல பொழியப் பெற்றன.

* * *

காரைக்கால்:—8-9-29-ல் திரு. என். கே. முருகையாவுக்கும் செல்வி சுந்திரவல்லி அம்மாளுக்கும் சுயமரியாதை நெறியில் நன்மணம் நிகழ்ந்தது. மூவலூர் செல்வியார் இராமாமிர்தத்தம்மாளும் சித்தக்காடு கே. இராமையா அவர்களும் இம்மணத்தை நிறைவேற்றினர்கள்.


### ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000சந்தாதாரர்களையுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங்கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், வயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இலவம்

வருட சந்தா தபால்கூலி யுள்பட

உள்நாடுகளுக்கு ரூபா 1-0-0

வெளிநாடுகளுக்கு ,, 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

(5)

## ஐய வினவுக்கு விடை

### மோட்சம், நரகம் என்பன யாவை?

